


# தமிழிசை

இசையிலக்கியத் திங்களேடு

ஆசிரியர் :

S. R. குப்புசாமி, B. A., M MUS

ஆண்டுச்சந்தா ரூ. 9 தனிப்பிரதி 75 காசு

~~பிலவங்க~~ - ஆனி ஆடி

# அறிவிப்பு.

1 சந்தாதாரர்கள் சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி ஆதரிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். "தமிழிசை"யைப் படித்து இசையார்வங்கொண்ட பெருமக்களைப் புதிய சந்தாதார்களைச் சேர்த்துக் கொடுத்துதவுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

2 விளம்பரம் தேடித்தர சென்னை மதுரை, தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களிலுள்ளவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம். சிறந்த பணச் சலுகையுண்டு.

3 அரசியல் துறையிலீடுபட்ட மாண்புமிகு அமைச்சர்களும் கல்வித் துறையதிகாரிகளும் நூலக மாவட்ட அதிகாரிகளும் இவ்வாறே இசைத்திங்களேட்டை கல்லூரி களிலும், பள்ளிகளிலும், நூலகங்ளிலும் சந்தா சேர்த்து ஆதரிக்கக் கோருகிறோம்.

4 அச்சுத்தாள் விலை நாளுக்குநாள் ஏறிக்கொண்டேயிருக்கிறது அச்சக சூழ்நிலையும் தொழிலாளிகளை முன்னிட்டு சற்று அனுகூலக் குறைவே. ஆனால் என்னைப்பொறுத்தமட்டில் உயர்திரு. காந்திதாசன அவர்கள், சிறந்த முறையிலும் சௌகர்யமாகவும் அச்சிட்டுத் தருவதுடன் ஆக்கக்கருத்துகளையும் ஊக்கமளித்து வருகிறார்கள் அன்னாருக்கு என் நன்றி என்றுமே உரியது

5 பதிவு எண்ணும் அஞ்சல் சலுகையும் கிடைத்திருக்கிறபடியால் இனி காலதாமதமில்லாமல் பிரதி தமிழ்த்திங்கள் முதல் தேதியில் இம்மலர் வெளிவரும்.

மற்ற விபரங்களுக்கு விண்ணப்பித்து தெரிந்துகொள்ளவும்.

S. R. குப்புஸ்வாமி,
உரிமையாளர்: "தமிழிசை"
35 விவேகானந்தா ரோடு,
ராம்நகர் P.O. கோயமுத்தூர்-9.

N. ramanathan.

"தீந்தமிழிசை வல்லார்க்குத்தீதியாதுமிலதே"

# "தமிழிசை"

( இசை இலக்கியத்திங்கள் வெளியீடு )


| துணர் 1 | கீலக ஆனி-ஆடி செப்டம்பர்-1968 | மலர் 3 |
| --- | --- | --- |


தமிழிசையினுள்ளே...

செய்திக்குறிப்பு: பக்கம்


1 ஆசிரியரின் வேண்டுகோள் ... ... 1 to 4

2 ஓங்கி உலகளந்த ... ... 1

3 மிடற்றுப்பயிற்சி ... ... 6

4 ஒலிவிளக்கம் ... ... ... 12

5 தொன்னூலிசை ... ... 16

6 சுவையான இசைத்துணுக்குகள் ... 20

7 வில்யாழ் ... ... ... 25

8 சிலப்பதிகார இசைக்கூறுகள் ... 30

9 ஒலியின் நவீன சாதனை .. ... 35


குறிப்பு: வாய்ப் பாட்டில் உயர்தரப் பயிற்சிக்கும் இசை இலக்கியப் பிரத்யேகப் படிப்புக்கும் வீணை மேளம் செய்வதற்கும் பயிற்சி பெறுவதற்கும் ஆசிரியுரைச் சந்தித்துக் கலந்துகொள்ளலாம்

3. நூலகங்களிலும் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் இசையரங்குகளிலும் சந்தா சேர்ந்து ஆதரிப்பதில் அரசாங்க அமைச்சர்களையும் கல்வித்துறையதிகாரிகளையும் இசைப்பேரறிஞர்களையும் ஆதரவாளர்களையும் பரிந்து வேண்டுகிறோம். இசைப் பணிபுரிவது எமது கடமை; இதைப் பரிமளிக்கச்செய்வது மாண்பு மிகு கல்வித்துறையமைச்சர், கல்வியதிகாரிகள் ஆகியோரின கடமையாகும். அன்னாரது ஒத்துழைப்பு ஆவலுடனும் நன்றியுடனும் கோரப்படுகிறது. அமைச்சர்களுக்கும் கல்வியதிகாரிகளுக்கும் "தமிழிசை" மலர்கள் தொடர்ந்து அனுப்பப்படுகின்றன. தனிப்பட்ட முறையில் அவர்களது ஆதரவை நாடி விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளது. இது அரசியல் பத்திரிகையல்ல ஜனநாயகத்தையோ பொதுநாயகத்தையோ ஆதரித்தோ எதிர்த்தோ வாதாடும் பத்திரிகையல்லவேயல்ல. இசைநாயகத்தை விளக்கி அதனால் மக்களனைவரும் நலனடைய வேண்டும் என்று விரும்பும் பத்திரிகை. கலாசாரப் பண்பாடுள்ளது. இசைக்கூறுகளை தெளிவுபடுத்துவது. நீண்டகால இசையாராய்ச்சியின் சாரத்தைத் தன்னகத்தேகொண்டது. எனவே மக்களனைவரும் ஆதரிப்பது மிகவும் அவசியமாகும்.

4. சங்கீத மும்மணிகள் என்று தமிழ் நாடெங்கும் நாதமய மாக்கிய தியாகையர், முத்துசாமி தீட்சிதர், சியாம சாஸ்திரி ஆகியோரை நாமெல்லோரும அறிவோம். இவர்கள் மூவரும் சாதிக்கமுடியாத அரிய பெரிய காரியங்களை இசையினாலே சாதித்திருக்கின்றனர். சிறந்தபாடல்களைப் பாடி அனேக நுட்ப ராகங்களைப் பிராபல்யமாக்கி இசைத்தொண்டாற்றியிருக்கின்றனர். தியாகையர் துறவு பூண்டு திருவையாற்றில் சமாதியடைந்துள்ளார் அன்னாரது விழா ஆண்டுதோறும் சிறப்பாகக்கொண்டாடப் படுவதை நாமெல்லோரும் அறிவோம். தீட்சிதர் தலைசிறந்த நாதஜோதி. ஜாதிமத வேற்றுமை பாராட்டாது சமரச நோக்கோடு மாணுக்கர்களுக்கு இசையமுதையூட்டியவர். எட்டையபுரத்தில் பூதவுடலைக்களைந்து இல்லறத்தோனுகவே இறை

# ஆசிரியரின் வேண்டுகோள்.

1. நமது "தமிழிசை மலர் மக்களின் இசைத் தேவைகளை நிறைவுசெய்து வருகின்றதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இசை சம்பந்தப்பட்டவையாவும் இதில் கிரமமாக வெளிவந்து, மருத்துவர்களாலும் மற்ற வைத்திய நிபுணர்களாலும் நோக்கமுடியாத நோய்களை இசை நொடிப்பொழுதில் குணப்படுத்தும் என்ற பேருண்மையை நிலைநிறுத்துவது நமது முக்கிய நோக்கங்களிலொன்றாகும். இது கேவலம் கட்டுரைகள் மூலம் வெளிவருவதுடன் மாத்திரம் நின்றுவிடாமல் அனுபவசித்தமாக்கப்படவேண்டும். நோய்களைக் குணப்படுத்துவதில் இசை சிகிச்சை முறைகள் கையாளப்படவேண்டும். இசை கேட்கும் ஆநிரைகள் அதிகமாகப் பால் கொடுக்கின்றன. (ஆஸ்டிரேலியா நாட்டில் அனுபவசித்தமாகக் காணப்படும் உண்மை) இது சம்பந்தப்பட்ட கட்டுரைகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும். நோய்வாய்ப்பட்ட நரம்பு மண்டலத்தை அதற்கேற்ற இசைப் பண்களைக்கொண்டு சிகிச்சை முறை விளக்கப்படும். சாமான்ய இசைக்கட்டுரைகளாக மாத்திரம் இல்லாமல் சிறந்த பயனையுமளிக்கும்.

2. நமது சந்தாதார்களில் பெரும்பாலானவர்கள் சந்தாவையனுப்பி, இத்துறையில் ஊக்குவித்து வருவதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இனியும் அனுப்பவேண்டியவர்களை அனுப்பிக்கொடுத்து ஆதரிக்குமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

அச்சுத்தாள் விலையேறிக்கொண்டேயிருக்கிறது. அப்படியிருந்தும் இந்த இதழிலிருந்து அதிகப்பக்கங்களை அச்சிட்டுச்சேர்த்திருக்கிறோம். போகப் போக இனியும் அதிகமாக்க இருக்கிறோம். இசை வல்லுநர்களின் சரிதை, பொதுமக்களின் கவனத்திற்கே வராத இசைச் செய்திகள் சுவைபட பிரசுரிக்கப்படும். இசைத்துறையில் அநேக ஆண்டுகள் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் பயன்களை இவ்விதழ்களில் தொடர்ந்து காணலாம்.

DEALERS IN PURE SILK FABRICS OF
EXQUISITE FINISH TASTEFUL DESIGNS

# THARAKARAM SILK HOUSE

9/4 Satyamoorthy Road,
RAMNAGAR P O, COIMBATORE-9.

**Authorised Dealers of Mysore Government Silks and Binny's Silks.**

PHONE: 22871.

## —: வாய்வு சூரணம் :—

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண பித்த வாய்வு, கைகால், இடுப்பு வலி வயிற்று வலிகட்குச் சிறந்தது
(பத்தியமில்லை) 150 கிராம் டின் ரூ. 4—00

## —: வீரகேசரி மாத்திரை :—

ஜீவசக்தி கனவிலும், சிறு நீரிலும் வெளியாவதைக் கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும், உறுப்புக்கு உறுதியும், இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்
(பத்தியமில்லை) 100 பில்ஸ் ரூ 25; 50 க்கு ரூ 13; 24 க்கு ரூ. 7.
(மெழுகு ரூ 4)

தேவைக்கு எழுதவும் :— (பார்ஸல் சார்ச்சு தனி)

பண்டிட் : S. V. R. கண்டர் சன்ஸ் RIMP
தம்மண்ணசெட்டி ரோடு, அரிசிப்பாளையம், சேலம்-9

நேரில் பெற :— (1) அமிர்தலால் அன் கோ, 146, ராஜா நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை. (2) ராஜா மெடிக்கல் ஹால், தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர் கண்ட் (3) வல்லாராம் நாடார் அன் சன்ஸ் 188-A தாராவி ரோடு, பம்பாய்-17 (4) சொக்கநாதம் செட்டியார், மருந்துக்கடை, திருப்பாப்புலியூர் (5) ஆத்ம ஜோதி நிலையம், நாவலப் பிட்டி (சிலோன்)

யுடன் கலந்தவர். சென்ற ஏப்ரல் மாதத்தில் அன்னாருக்கு ஓர் நினைவுச் சின்னம் எழுப்பவேண்டி, வ. உ. சி. கல்லூரி முதல்வர் பேராசிரியர் சீநிவாசராகவன் தலைமையில் விழா கொண்டாடப்பட்டது. கோவை இசைப் பித்தன் போன்றவர்கள் இதில் பங்கு கொண்டனர். இத்தகைய இசை மேதைக்கு, அவர் இம் மண்ணுலகை நீத்த இடத்தில் (எட்டையபுரத்தில்) நினைவுச் சின்னம் அமைப்பது நமது தீராக்கடமையாகும். எனவே இதைக்கண்ணுறும் பெருமக்களே, இந்த நினைவுச்சின்னம் எழுப்புவதில் ஆர்வங்காட்டி, ஆவன யாவும் செய்து இக்கனவு நனவாக்க முன்வரவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். அன்னாரது உருப்படிகளில் சிறந்த இசை நுட்பங்களும் இராக பாவங்களும் செறிந்து கிடக்கின்றன. எனவே ஆண்டுதோறும் பெருவிழாக் கொண்டாடி, தீட்சிதரின் இசை ரத்தினங்கள் மங்காமல் ஒளி வீசிக் கொண்டேயிருக்கும்படி செய்வது நமது தலையாய கடமையாகும். மேடையில் வினிகைகள் நடத்தும் இசை மேதைகள் இதை முக்கியமாய்க் கவனித்துப் பொருளீட்டு, ஆவன செய்வது அவர்களது முழுமுதற்கடமையாகும். அதேபோல் சியாம சாஸ்திரியும் உடையார்பாளையத்தில் திருநாட்டையலங்கரித்தார். அவர் இயற்றிய இசைச் சேவையோ, அளப்பில. தாளநுட்பங்களும் இராக நுட்பங்களும் ஒருங்கே அமைக்கப்பெற்றவை. இராக விளக்கம் விரும்புகிறவர்கட்கு அவை தெவிட்டாத அமிர்தமாகும். அன்னாருக்கும் உடையார்பாளையத்தில் சிறந்த ஞாபகச் சின்னம் இன்றியமையாததாகும். இத்துறையிலும் பொது மக்களும் ரசிகர்களும் ஆதரவாளர்களும் சிறந்த பங்கெடுத்துக் கொண்டு ஞாபகச் சின்னம் எழுப்பி, இசை விழாக் கொண்டாடி, அன்னாரது பாடல்களைப்பாடி இன்புற வேண்டியது மிகமிக அவசியமே.

5) இது வரையில் பொதுமக்களின் கவனத்திற்கு வராத அனேகபாடல்களை பற்பல மூலைமுடுக்குகளிலிருந்து சேகரித்துள்ளேன். அனேக இசையிலக்கண நூல்களி

விருந்து நமக்கு மிகவும் தேவையான இசைத் துணுக்குகளையும் சேகரித்துள்ளேன். இராகக்கூறுகள், பிரத்தியேகமான சஞ்சாரக்கிரமங்கள், தாளநுட்பங்கள், இசைக்கருவிகளின் வரலாறு, இசைமேதைகள், வல்லுநர்கள், பொருநர்கள், பெரும்பாணர்கள் முதலியவர்களின் வரலாற்றுப் பகுதிகள் ஏராளமாய் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. பொது நூலகங்களிலும் தனியார் நூலகங்களிலும் மலிந்துள்ள, கணக்கிலடங்காத நுட்பங்கள் ஆராயப்பெற்றுள்ளன. இத்தமிழிசை மாத மலர் மூலம் அத்தகைய நுட்பங்களை விளக்கி நாடெங்கும் இசைமணம் கமழும்படி செய்ய நோக்கங்கொண்டுள்ளேன். பொதுமக்களும், இசைத் தொழில் மேதைகளும் அடியேனுக்கு ஆவன செய்து ஊக்குவிக்கும்படி கோருகிறேன். நேயர்கள் இவ்விதழ்களைப் படித்து ரசிப்பதுடன் மற்ற இசைப்பிரியர்களுக்கும் தெரிவித்து இசைவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

6) அஞ்சல் பதிவு எண் தரப்பட்டிருக்கிறது. இனி காலதாமதமில்லாமல் ஒவ்வொரு தமிழ் மாத ஆரம்பத்திலும் "தமிழிசை" வெளிவரும். பழைய சந்தாதாரர்கள் புதியவர்களைச் சேர்த்துக்கொடுத்து ஆதரவளிக்கத் தாழ்மையுடன் வேண்டுகிறேன். வணக்கம்.


BETTER SAVINGS

*For your future prospects, Subscribe through*

**The Coimbatore Sridevi Funds, (Regd.)**

**9 / 252, CROSS CUT ROAD, COIMBATORE-12.**

**Our Monthly Schemes: Monthly**

| | | |
|---|---|---|
| Rs 200/- for Rs. 5000/- | Months | 25 |
| Rs. 50/- for Rs. 1000/- | ,, | 20 |
| Rs 25/- for Rs. 500/- | , | 20 |
| Rs 50/- for Rs. 2000/- | ,, | 40 |
| Rs. 25/- for Rs. 1000/- | ,, | 40 |
| Rs. 10/- for Rs. 400/- | ,, | 40 |

REGD No 384 CSDF THE COIMBATORE SRIDEVI FUNDS

**Our Daily Schemes:**

Daily Rs 10/- for Rs. 4000/- Daily Rs. 5/- for Rs. 2000/-

Daily Rs. 2½/- for Rs. 1000/- Daily Rs 1¼/- for Rs 500/-

**All For 400 Days:**

Managing Partners:

**1 K. G. Radhakrishnan. 2 C D. Sagaran, 3 V. N. Ramachandran.**

*IF YOU SAVE MONEY — MONEY WILL SAVE YOU*

# ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி.

ஆண்டாள் திருப்பாவையில் உலகளந்த பெருமானை எப்படிப்பா டுகின்றாள் பாருங்கள்! எம்பெருமானைக் காணவேண்டும் என்ற ஆர்வம் வெள்ளப் பெருக்கெடுத்துத் திருப்பாவையாறாக ஓடுகின்றது. "ஒன்றே தேவும், ஒன்றே உலகும்" என்று எம்பெருமானாகிய அழியாச் செல்வத்தை விழைந்து நிற்கின்றார் ஞான ஒளியைப் பெற்று இறையை வழிபடுதலை இசைப்பா மூலம் ஆக்கியுள்ளார் என்பதை உய்யக்கொண்டார்

"பன்னுதிருப் பாவைபல் பதியம் - இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை"

என்று வெகு அழகாக விளக்கியுள்ளார். எல்லா உறவும் முறையும் அவனே என்றும், நாம் செய்யும் கைங்கரியத்தினால் அவன் கொள்ளும் ஆனந்தத்தைக் கண்டு நாம் இன்புறுவோம் என்பதையும் கோதையார் விளக்குகிறார். இறையன்பால் ஆன்மாவை அழகுறச் செய்கிறார்; அடியார் அன்புதான் ஆன்மா; ஆன்மாதான் அடியாரன்புஆழ்வார்களுக்கு மயர்வு அறமதிநலம் அளித்த இறைவன் நம் கோதையரிடம் இதைப் பெற்றுக் கொள்கிறான் என்பது அறிஞர்களின் கருத்து ஏனென்றால் உலகமக்களோடு சேர்ந்து கலந்து ஞானவைராக்கியங்களைப்பெற்றுச் சிறப்படைகிறார். அடியார்கள் இசைபாடிப்பேறு பெற்றதையறிந்தநம் கோதையார் தாமும் தம் இனிய குரலால் எம்பெருமானைப் பண்ணெனப் படுகின்றார். இசை இறையிடம் ஓர் கூறு. ஈசனைச் சரிவர அறிவதற்குப் பார்வதியம்மையாருக்கு ஈசன் "சுரார்ணவம்" பாடுகின்றான் என்பது புராணச் செய்தி. நாரதனுககுக் கண்ணன் உபதேசம் செய்கையில், "தானம, தவம், வேள்வி, தலயாத்திரை முதலியவற்றால் என்னை மகிழ்விக்கவியலாது; எனது நாம சங்கீர்த்தனம் ஒன்றுதான் என்னை மகிழ்விககும்" என்று கூறுகிறான். (அற்புதராமாயணம்) எனவே நம் திருப்பாவைச் செல்வியாரும் உலகளந்த உத்தமனை இன்னிசையால பாடுகிறார்.

பரமனடி பாடுதலையே தம் முதற்கடமையாகக் கொண்டுள்ளார் நம் கோதையார். இப்பாட்டில் "உத்தமன் பேர்பாடி" என்று பேரருளை

விளிக்கின்றூர். நாம சங்கீர்த்தன மாண்பை உணர்த்துகின்றூர். மக்கள் தூய்மை அடைவதற்கு எம்பெருமான் திருநாமங்களை வாயாரப்பாட வேண்டுமென்று தெரிவிக்கிறூர். நாமம் பலவும் இசைப்பாக்களாக மலரும்பொழுது எத்துணைப் பேரின்பமேற்படுகிறது பாருங்கள்; பழங் காலந்தொட்டு இறையன்பை இசை மூலம் (Vehicle) பத்தர்கள் உணர்த்தியுள்ளனர். விஷ்ணுபுராணம் என்ற நூலில் யுகவறங்களை விளக்குமிடத்து நாம சங்கீர்த்தன மகிமையைப் புலப்படுத்துகின்றூர் வியாசபகவான். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்ற நான்கு யுகங்களில் மக்களின் வாழ்க்கை முறை, இறையன்பு முதலியவைகளுக்கு இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. ஐம்புலன்களையு மடக்கி, பல விடங்களில் சிந்தனையைச் சிதற விடாமல் ஈசனைக் குறித் துத்தவமியற்றுவதை கிருதயுக முறை என்றும், பொருளீட்டு வேள்வி செய்தலை திரேதாயுக முறையென்றும், ஈசனை அர்ச்சாரூபத்தில் வழிபடு வதைத்துவாபர யுகமுறையென்றும், நாம சங்கீர்த்தனம் செய்வது கலி யுக முறையென்றும் ஆன்றோர் கூறிப்போந்தனர். இககலியில், இகத் தில் மட்டற்ற நற்சுகத்தையும் பரத்தில் பேரின்பத்தையும் அளிக்க வல் லதும், சுலபமான உயர் வழியும் யாதெனில், ஈசனிடத்து மெய்யன்பே யாகும். புலன்களைப் புறம்பே விடுத்து வாழ்க்கைக் கடலில் தயங்கி மயங்கிக் கிடக்கும் நம்போன்றூர்க்கு பகவன் நாமசங்கீர்த்தனமே சிறந்த துணையாகும். கவியரசர் கம்பர் கூறுவதுபோல் நாமசங்கீர்த்த னம் நன்மையும் செல்வமும் நாளும் நல்கும்; தின்மையும் பாவமும் சிதைந்து தேயும்; பிறவியும் மரணமுமின்றியே தீரும் இதையே சிவ னடியார் திருஞானசம்பந்தர்

''காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேத(ம்) நான் கினு(ம்) மெய்ப்பொருளாவது
நாத நாம நமச்சிவாயவே"

என்று பாடுகின்றூர். பரமனது திவ்யகல்யாண குணங்களையும் சிறந்த நாமங்களையும் மனமுருகப்பாடுவதால்,நம்மை வந்தடைந்துள்ள மாபெரும் பாவங்களினின்றும் வீடு பெறுவர் என்று பத்தர்கள் பரவு கின்றனர். மேலும் ஈசன் எங்குமில்லையாம்: வைகுண்டத்திலோ வேள்விச்சாலையிலோ, பகலவன் ஒளி பரவுமிடத்திலோ இல்லையாம்; ஆனுல் எங்குமெய்யன்பர்கள் பரமனின் நாமகானம் பண்ணுகிறூர் களோ, அங்குதான் அவன் இருக்கின்றூனும்.

''போதுவார் நீறணிந்து பொய்யாத ஐந்தெழுத்தை
ஓதுவார் உள்ளம் என உரைப்பாம் -நீதி ஆர்

"பெம்மான், அமரர்பெருமான், ஒருமான்கை
அம்மான், நின்ருடும் அரங்கு" ௪௨

என்பது யாவருமறிந்ததே. எனவே அடியார்கள் பக்திப்பெருக்கத்துடன் நாமசங்கீர்த்தனம் செய்யுமிடத்தில் ஈசனுளன் என்பது நம் முன்ஞேர் கொள்கை. இதைத்தான் நம் திருப்பாவைச் செல்வியார் செய்துள்ளார், நம்மையும் செய்யச் சொல்லுகின்ருர்.

நாரணனே ஓங்கி உலகளந்த உத்தமனென்கிருர் கோதையார் நாரணன் வாமனனுய் (குட்டையனுய்) வந்து மாவலி மன்னனிடம் மூன்றடியிடங்கேட்டு, கீழுலகங்களையளந்து மேலே காலைத் தூக்கிய பொழுது, விண்வெளியில் கால் மிதந்து மேலே சென்றதாம், (மகாகவி காளிதாசனின் சகுந்தல நாடகத்தில் திருவிக்கிரமனடி மேலே பரிவகம் என்ற காற்றுப்பகுதியை (Sphere) அடைந்தபொழுது மிதந்து சென்றிருக்க வேண்டுமென்ற உண்மை புலனுகிறது. சமீபகாலத்தில் வானவெளியில் சென்ற டிடோவ் போன்றவர்களின் உடல் மிதந்ததையும் நாம் தினசரி செய்தித்தாள்களில் படித்திருக்கிருேமல்லவா !) இதே பரிவக மார்க்கத்தில் கங்கை பெருக்கெடுத்து மிதந்து வந்த செய்தியை புராணங்களில் காண்கிருேம். நாரணனைக் கோதையார் "உத்தமன்" என்கிருர்; ஏனெனில் சுயநலங்கருதாது, தன் சௌகரியங்களைக் களைந்து மற்றவர்களுக்கு நலம் பயக்கும் பெருங்குணமுள்ளவன் என்று பாடுகிருர் கோதையார் எனவே இப்பேற்பட்ட உத்தமனைப் பாடுவதைச் சிறந்த குணமாகவும் கூறுகிருர். "எம்மானைச் சொல்லிப்பாடி", என்றும், "வேதமுதல்வனைப் பாடி", என்றும், "பணகடலைக் கொள்ளைப்பாடி" என்றும், "சொல்லிச்சொல்லி நின்றெப் போதும்", என்றும், "சிரீதரன் தொல் புகழ்பாடி", என்றும், "வாய் கொள்வாசகமும் மணிவண்ணன் நாமமே", என்றும் "பாடிப்பாடிக் கணணீர் மல்கி", என்றும், "நம் மாயவன்பேர் சொல்லி வாழ்மிஞே" என்றும், இவ்வாறெல்லாம் அடியார்கள் போற்றுகின்றனர். எனவே நாம் பெற்றபேறு இவ்வையகமும் பெறட்டும் என்று ஆனந்தத்தில் ஆழ்ந்து நிற்கின்ருர் கோதை.

சாத்திரங்களும் ஆராய்ச்சியாளரும் இறைக்குப் பரமபதம் பாற்கடல், அவதாரம், உயிர்களின் உள்ளுறைதல் (அந்தர் யாமித்வம்) அர்ச்சாவதாரம் என ஐந்து நிலைகளை விளக்குகின்றனர் ஆனல் கடவுள் குணம் நிரம்பப்பெற்ற இடம் அர்ச்சாவதாரம் என்று கருதுகின்றனர் இதுவே எம் பெருமாள் திருவருளைப் பெறுதற்குத் தகுந்த இடம். ஆகவே நம் கோதையாருக்கு அர்ச்சாவதாரத்தில் அமைந்த பெயர் ஆண்டாளென்பதே திருப்பாவைபாடிச் செல்வியாரென்றும

பூமாலையைச் சூடிநாய்ச்சியாரென்றும் பெயர்வாய்க்கப்பெற்றார். தன் அன்பினாலும் அருளினாலும் உத்தமன் பேர்பாடுவதோடு நிற்காமல் உயிர்களை இறையிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறார். இவரால் சேர்ப் பிக்கப்படும் உயிர்களும் பெருப்பேறு பெற்று இன்பந்துய்க்கின்றன. இறைவனை அடைய இவர் கன்மம், ஞானம், பத்தி பிரபத்தி என நான்குபடிகளை ஆய்கிறார். இவற்றுள் பிரபத்தியே சிறந்ததென்று எடுத்துக் காட்டுகின்றார் மிக எளிமை. விரைவில் பயனளிக்கவல்லது. நம்மை உய்யச்செய்கிறவன் இறைவனே என்று கருதி அவன் திருவடிகளைப் பற்றிப்பிரபத்தியிலக்கணத்தை வெளிப்படுத்தும் நாம சங்கீர்த்தனம் செய்யச் சொல்லுகின்றார்.

உலக அன்பு, உயிர் அன்பு என்றுபத்தியை இருகூறாக வகுக் கிறார் நம் கோதையார் உலக அன்பு என்பது அஞ்ஞான வகைப் பட்டதாகும். உயிர் அன்பும் இறை அன்பும் ஒன்றே திருமாலை அடையத் தக்க வழியை திருப்பாவையில் விளக்கியுள்ளார். பத்தியை யும் தம்மையும் வேறுபடுத்த இயலாதபத்திமயமானநிலையியே

அஞ்சுகுடிக் கொருசந்ததியாய் ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையாய்

ஆய்விடுகின்றார். (உபதேச ரசத்தினமாலை, 24) இவரிடம் தன் னலங்கருதாத இறையன்பு பரணமிக்கினறது. ஞானநிலையில் ஆட வராய் நின்ற ஆழ்வார்கள் பத்திநிலையில் பெண்மையராய்மாறிவிடுகின் றனர். ஆனால் இயற்கையிலேயே பெணமையான கோதையார் எங்கும இறையைக் காணகிறார். எல்லாம் பரம்பொருளாய்க் காட்சியளிக்கின் றது. இறைவன் இன்னருளைப் பெற ஆழ்வார்கள் பெண் இயல்பை அடைகிறார்கள் ஆனால் இயற்கையாகவே பெண்மையான செல்வி யாரின் பெட்போ இத்தன்மையது என எடுத்துக்கூற இயலுமோ! இறைவனை எப்போதும் சிந்தித்தலும் பாடுதலும் இவரது தொழில் பூமாலையும் பாமாலையும் சூடிப்பாடி உன்னத இடம்பெற்று ஒளிரு வோர் நம் கோதையரொருவரே.

நன்றிருபெட்டெழுத்தும் கற்றும்
நானுற்றதும் உன்னடியார்க்கடிமை

என்பது இவ்வுணமையை எடுத்து விளக்குகின்றது. மற்ற ஆழ்வார் களைக்காட்டிலும் கோதையார் சிறந்தவாரென்று பெரியவாச்சன்பிள்ளை கூறுகின்றார்

இறையிலக்கணம்யாது' அடியார்களுடன் கலந்து அவர்களது அன்பைப் பெருக்கி உயிரையும் உள்ளத்தையும் வசப்படுத்துவதுதான். இதைக் கண்ணன் செயலில் காட்டுகின்றான் கோதையார் மனங்கவர் கின்றார். இதனால் இவர் எல்லாவற்றிலும் இறையின் படிவங்களையே காண்கிறார், ஆடிப்பாடிக் களிக்கிறார், அவனது உத்தம குணங்களும உருவமுமே கண்முன்னே நிற்கின்றன, அவனது எல்லாத்திருநாமங் களையும் என்று அருளிச் செய்து திருமந்திர பரமாகப்பொருள் கொள் ளுகின்றார். இறைவனிலும் அவனது திருநாமத்திற்கேவாசி அதிகம் இயற்கைப் பொருளே உடல், அவற்றின் அழகே உயிர், இவற்றினுள் ளிருக்கும் இறை உயிருக்குயிர். இவையெல்லாம் நம்மனதையுருக் கிப்பணபடுத்தும் பகவன நாம சங்கீர்த்தனத்தில் இயைந்து தமது பாசுரங்களை இசைத் தமிழாய்ச் செப்பியுள்ளார் உலகளந்த உத்தமன் இயற்கையை உடலெனக் கொண்டு ஒளிருகிறான். எனவே இயற்கை யில் இறையைக் கண்டுவழிபடுவது சாலச்சிறந்ததே அவனே அணுவில் அணு, மலையில் மலை. தன குணங்கள் நிறைவு பெற அர்ச் சையாய் நிற்கிறான் என்பது வைணவ சித்தாந்தம். மற்றசமயங்களும் இவ்வுண்மையை ஒப்புக் கொள்ளுகின்றன. மனம்உய்தற்குரிய நுண் ணிய உருவம்பெற்ற இறையை அர்ச்சையில் வழிபடுவது சிறப்பு நிலை என விளக்குகிறார்

எல்லாவற்றையும் ஆய்ந்துதான் கோதையார் "ஓங்கி உலக ளந்த உத்தமன்" என்ற உருவத்தில் அவன் பேர்பாடுகின்றார். உருவ மின்றேல், மனம ஒருப்படுதலில்லை காணாத கடவுளிடம் மனததைக் குவியச்செய்வது உருவமே. தற்கால விஞ்ஞானிகள் கூட இதை ஒப்புக் கொள்கிறார்கள். அர்ச்சையே ஈசுவர குணங்களனைத்தையும் பெற்றுள்ளது என்பது வைணவசித்தாந்தம், பிரபத்தியைச்செய் வதற்கும் ஏற்றவிடமுமாம். இந்தப்பிரபத்தியே விரைவில் பயன ளிக்குமென்பதும அவர்கள் உறுதி திருவாய்மொழி (6-10) இல்

புகலொன்றில்லா அடியேனுன்
அடிக்கீழமர்ந்து புகுந்தேனே

என்றும் பெரியதிருமொழில் (6) "வந்துன திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துள் எந்தாய்" என்னும் ஆழ்வார்களின் பாசுரங்கள் இதற்குத தக்க சான்றாம். அர்ச்சாவதாரத்தைப் பற்றிப் பேசுகை யில் சிறப்பாகத் திருவரங்கம், திருவேங்கடம், திருமாலிருஞ் சோலை முதலிய விடங்களிலுள்ள அர்ச்சாவதாரத்தைவிளக்குவது பொதுவாக எல்லா இடங்கட்கும் ஒக்கும்.

அகப்பொருள் இலக்கணநிதி நம் தமிழ் மொழியின் தனியழகு; தமிழகத்தின் பாகுபாடுகளைத் தெள்ளிதின் உணர்த்தும் பெட்பு. இத்துறையில் தமிழகம் எய்திய மேன்மையை விளக்குவது அகப்பொருள் இலக்கண நிதியே. இவைகளால் அளவிட இயலாத நெறியை நம தமிழ் மொழி சிறப்பாக வரையறுத்துக் கூறுகின்றது. ஈங்கு மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார் நம்மாழ்வார், போன்ற சான்றோரின் மனப்பான்மையை நினைவு கொள்ள வேண்டும். ஆனால் நம் கோதையரோ, இவர்களைவிட இவ்விலக்கியத்தில் ஆழமூழ்கி அதன்தத்துவத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல் செயல் முறைப் படுத்தியவர்

# மிடற்றுப் பயிற்சி (Voice Culture)

சுவற்றை வைத்துக்கொண்டு சித்திரம் எழுதவேண்டும் என்று பெரியோர்கள் கூறுவர்; எனவே நல்ல இனிய எலலா விதஉதவுபடிகள் பேசக்கூடிய அளவில் சாரீரத்தைச் சிறந்த முறையில் பயிற்சி செய்து கொண்டுபாடுவது நலம். வாயால் பாடுபவர்களுக்குச்சாரீரம் அல்லது நல்ல குரல் இன்றியமையாதது. அதைச் சீரியமுறையில் பயனளிக்கும் வண்ணம் தக்க பயிற்சி பெறவேண்டும். இல்லையேல், "கானமயிலாடக்கண்டிருந்த வான்கோழி" கதையாய்விடும். பண்டைய தமிழிசை நூலாசிரியர்கள் மிடற்றை ஓர்கருவியாகவும் அதில் எழும் ஒலியை "மிடற்றுப்பாடல்" என்றும் கருதியுள்ளனர். சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையுரையில் (வரி 26) 'பண்ணும் இசையுமாகிய இவற்றை பயக்குமிடறு; ஆகுபெயரான் மிடற்றுப்பாடலென்றுயிற்று' இதைக் கண்டப்பாடல அல்லது வாய்ப்பாட்டு என றுதற்காலம்வழங்குகிறோம். அயல் நாடுகளில் மேடைப் பேச்சாளர்களுக்கும் பள்ளி ஆசிரியர்களுக்கும் மிடற்றிசையிலீடுபட்டவர்களுக்கும் சிறந்த சாரீரப்பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சிமுடிவுற்றுத் தேர்ச்சி பெற்றபிறகே' தான் இசைப்பணபுகள் போதிக்கப்படும். மிடற்றுப்பாடலுக்கென்றே தனியிலக்கணம் இருக்கின்றது. நமது பழந்தமிழர்களோ, இப்பயிற்சியில் மிகவும் மூத்தவர்கள். இதற்கென்ற தனியிலக்கணம வகுத்துள்ளனர். நல்ல முறையில் பயிற்சி பெற்ற மிடற்றுப்பாடலால் சாதிக்க முடியாத அரிய பெரிய காரியங்களைச் சா

தித்துள்ளனர். மருத்துவமுறைகளுக்கடங்காத நோய்களை இசைமூலம் குணப்படுத்திபிருக்கின்றனர்; கட்டுக்கடங்காத நரம்புகளை வசப்படுத்தியிருக்கின்றனர்; வெடித்த ரத்த நாளங்களைச் சீராக்கியுள்ளனர், ஏன் மூளைக் கோளாறுகளையும் நேராக்கியுள்ளனர், இவை எல்லாவற்றையும் சிறந்த பயிற்சி பெற்ற மிடற்றிசையால் தான் செய்ய முடிந்திருக்கிறது.

சிலப்பதிகாரம், அரங்கேற்று காதையின் அரும்பதவுரையில் மிடற்றிசையிலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது மனித உடலில் ஓசையொலிகட்கெல்லாம் ஆதிகாரணமாகவுள்ளது மூலதாரம்தான். இதனையே வடமொழி நூலாசிரியர்கள் ''பிரம்மக்கிரந்தி" என்று கருதுகிறார்கள். இது மேல் மூலம், நடுமூலம், கீழ்மூலம் என மூன்று கூறாக வகுக்கப்பட்டுள்ளது. நாபியின்பக்கலிலுள்ள நடுமூலமே மூச்சு நின்றியங்குதற்குப்பெரிதும் பயன்படுகின்றது. மூச்சு. சுவாசாசயத்தினின்று தொடங்குகிறது. வாய்வழிவிடும் காற்றால் கிளப்பப்படுகின்றது. தம்கருத்தால் இசையொலிகளை ஆய்ந்து, கருத்தும் காற்றும்ஒன்றுபட மிடற்றில் தாக்கினால், இசையொலிகள் பிறக்கும். இசையிலக்கணப்படி இவற்றுள்ளே பண்களின் தன்மையைத் தோற்றுவிக்க வேண்டும். எனவே இம்முறையில் இசையிலக்கணம் வழுவாதுபாடப்படும் பாடலையே மிடற்றுப்பாடல் என்றும் அதற்காகஎடுத்துக் கொள்ளும் பயிற்சியை மிடற்றிசை எனறும், அப்பயிற்சிக்கேற்ப இலக்கணமுள்ளது எனபது நம்பண்டைத்தமிழிசை நூலாசிரியர்களின் கூற்று. இம்மிடற்றிசை ஐந்துபடிகளாய் நிற்கின்றன.

1 மூக்கால் மூச்சாகவிடாமல் வாய்வழிவரும் காற்றாகவே வெளி விடவேண்டும்.

2 இசையொலியை குறையொடு ஆய்ந்து சிறந்த முறையில் ஒலிப்பிக்க வேண்டுமென்று கருத்திற்கொள்ள வேண்டும். இவ்விதம் செய்யாவிட்டால சத்தத்தை ஏற்படுத்தாமல் வாய்வழியாகக் காற்றுத் தாண வரும்

3 ஒலிப்பிக்கவேண்டி கருத்திற்கொண்டபடி, குரல்வளை (மிடறு) ஒலியைப்பயக்குமாறு வாய்வழி மூச்சால் வந்தகாற்றைககருத்தோடு இழையச் செய்து அதனில் தாக்கவேண்டும்.

4 இச்செயலால் வெளிவரும் பல இசை ஒலிகளைப்பலதான நிலைகளாகப (ஸ்தாயியாக) பகுத்துக்கொள்ள வேண்டும். பண்டைய காலத்தில் மெலிவு, சமன்,வலிவு, (Low, middle and high Octaves) ஆகிய

தான நிலைகளில் அல்லது இயக்குகளில சஞ்சாரம் செய்யவேண்டும் என்று வகுத்துள்ளனர்

5 பண்ணிலக்கணம வழுவாது இவ்வொலிகள் உணர்ச்சிகளைத் தோற்றுவிக்க வேண்டும். உதாரணம் ஒருவர் தோடி பாடுவதாகக் கொள்வோம. அவரது மிடற்றால் எழுப்பிய ஒலிகள தோடி இலக்கணத்திற்கு மாறாது இருந்தால் தோடிக்கேற்ற ராகபாவம் வெளிப்படும்

ஆனால் காலரீதியையனுசரித்து ஒவ்வொருதான நிலைக்கும ஏழு கேள்விகள் (சுரங்கள்) வீதம் இரண்டுதான நிலைகளாவது கையாளப்பட வேண்டும். எனவே இரண்டுதான நிலைகளுக்க பதினன்கு கேள்விகளுண்டு இசையோன இவற்றில் தனக்கேற்ற கேள்வியைப் பற்றாகக (சுருதியாகக) கொண்டு இசையொலிகளை எழுப்பவேண்டும் இவ்விதம் எழுப்பப்படும் இசையொலிகள் பற்றுவழியுடன் சேர்ந்து இருந்தால் தான இசைக்குவேண்டிய இனிமைபயக்கும். சிலப்பதிகாரம் புறஞ்சேரியிறுத்தகாதை (வரி 106-108) யில் "ஒற்றுறுப்புடைமையிற்பற்றுவழி சேர்த்தி" என்று யாழுக்குப்பற்றுவழியமைப்பதை அடிகள் விளக்குகிறார் வடமொழியிசையிலக்கணம் வகுத்தவர்கள் பற்றை (சுருதியை) தாய் என்றும் லயத்தைத் (தாளத்தைத்) தகப்பனென்றும் விளக்கியுள்ளனர் (சுருதிமாதாலய: பிதா) தற்காலம் சமனியக்கிலுள்ள (middle octave) குரல் என்ற கேள்வியை அதாவது நாண குரலைப்பற்றாகக் கொண்டு இசையைத் தொடங்குகின்றனர். எனவே ஆரம்பிக்கும் அடிமனைக கேள்வியைப்பற்று அல்லது சுருதி என்று கொள்கிறோம். இத்துடன் ஒத்து இணைந்து மற்ற ஒலிகளைஎழுப்ப வேண்டும். ஒரு தானநிலையிலுள்ள ஏழு கேள்விகளில் எதை எடுத்துக் கொண்டாலும் அதை ஆரம்பித்த "ச" என்ற குரலோடு சம்பந்தப்படுத்தி அதன் விகிதத்தில் (Ratio) மற்றயகேள்விகளை முறைப்படுத்துவது இசைச்கணிதவியல்பு.

இதைச்சற்று விரிவாக விளக்குவாம். சமனியக்கில். மத்திய ஸ்தாயியில் ஆரம்பிக்கும் "ச", என்ற கேள்வியை நாணகுரல் என்றும் ஆதாரசுருதி என்றும் ஆங்கிலத்தில் Tonic என்றும் கருதுகின்றனர் இவண் இளங்கோ அடிகளின் விளக்கம சிறந்திக்கற்பாலது சிலப்பதிகாரமவேனிற்காதை 35-வது வரியில் "குரலவாய் இளிவாய்க் கேட்டனள்" எனபதற்கு உரைகாரர் "குரல் முதலாவதாக எடுத்து இளிகுரலாக வாசித்தாள் (மாதவி) என்று பொருளளிக்கின்றார். மெலிவிற்கெல்லையான "ச" என்ற ஒலியைக்குரலென வெடுத்துப்படிப்படியாக ச, ரி, க, ம, ப என்றுபாடிக்கொண்டு போகையில் ஐந்தாவதாகவந்த "ப" என்ற இளியைத்திரும்பவும் குரலாக ("ச" என்று)

அமைத்துக் கொண்டு தனதுமிடற்றிசைப்பாடலை நிகழ்த்தினுள் என்று தெரிய வருகின்றது.

| | 1 | 2 | 3 | 4 | - | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | - | 12 | 13 | 14 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதலில் பாடியது : | ச | ரி | க | ம | - | ப | த | நி | ச | ரி | க | ம | - | ப | த | நி |

பிறகு இளியைக் குரலாகப்பாடியது } மபதநி - சரிகமபதநி - சரிக
மெலிவியக்கு - சமனியக்கு - வலிவியக்கு

இவ்விளக்கத்திலிருந்து ஐந்தாவதாக வருகின்ற "ப" என்ற இளி ஒலியைத்தனச்சேற்ற பற்ருக இசையோன் கொள்கிருன என்பது அடிகளின் கொள்கை. இவ்வொலியில், ஏழுசுரங்களில் முதலாவதாகவுள்ள "ச" முதலில் எடுத்துக்கையாளப்படுகிறது. இவ்வாறு கேள்விகளைக்கையாளுவதால் அதிக சிரமமின்றி மூன்று இயக்கங்களையும் பாடலாம். மூன்று இயக்கங்களிலும் விரவாத மிடற்றை பண்டைய நுலாசிரியர்களும் இசை வல்லுநர்களும் ஓர் சாரீரம் என்று மதிப்பதில்லை எனவே மூன்று இயக்குகளிலும் சஞ்சாரம் செய்வது சாலச்சிறபபுடைத்து மலே காட்டிய பற்றுவழி முறையில்முதல்நான்காயுள்ள சரிகம என்பதையே, மெலிவியக்கில் மபதனி, என்று அமைகின்றன. பிறகு ஐந்தாவதாய்வரும் "ப" என்ற இளியைப்பற்ருக அமைத்துக்கொள்ளும் பொழுது 'ப' என்பது 'ச' வாக மாறிவிடுகின்ற படியால். இத்துடன் அடுத்துவரும் சரிகமபதநி என்றுகேள்விகள் சமனியக்கில் அமைகின்றன. முதலில் பதநி என்பது பிறகு சரிக என்று வலிவியக்கில் அமைகின்றது; முதலில் மெலிவியக்கிற்கு எல்லையாயிருந்த குரல் "ச" பின்பு உழை "ம" யாகவும், அதேபோல முதலில் வலிவியற்கிற் கெல்லையாயிருந்ததாரம் "நி" பிறகு கைக்கிளை "க" ஆகவும் அமையப்பெறுகின்றன

இதை இளங்கோ அடிகள் சிலப்பதிகாரம் வேனிற்காதை வரி 31, 32-ல் விளக்குகிருர்,

**பிழையாமரபின் ஈரேழ் கோவையை**
**உழைமுதற்கைக்கிளையிறுவாய்க்கட்டி**

'**உழைமுதல்கைக்கிளை ஈருகப்பண்ணி**" என்று உரையாசிரியர் **விளக்குகிருர்** இவ்வுண்மையை அடியார்க்கு நல்லார் அரங்கேற்றுகாதைக்கு உரையாக்கும் பொழுதே விளக்கியுள்ளார், "உழைமுதற் கைக்கிளை இறுதியாகமெலிவுநான்கும். சமம்ஏழும் வலிவுமூன்றுமாய்" என்று விளககந்தருகின்ருர்.

இசை நிகழ்த்துவோர் தமக்கென அமைத்துக்கொண்ட சுருதியை எவ்வளவுக்கெவ்வளவு நன்ருய்ப்பற்றிக்கொள்கிருர்களோ, அவ்வ

ளவுக்கவ்ளவு அவர்கள் எழுப்பும் இசை இனிமை (melody) பயக்கும்; இதைத்தான் மூல ஒலிஎன்று கருதுகிறோம். இதை இவ்வாறு எப்பொழுதும் பற்றிக்கொண்டே இருத்தல் ல் இதனை நம்முன்னோர்கள் 'பற்று' என்று வழங்கியுள்ளனர். உரையாசிரியர்களும் இசைவல்லுனர்களும் பற்றைவிளக்கும்பொழுது அன்பு, இசைவு, ஏற்கை, ஓட்டு, சார்பு, சேர்வை, சம்பந்தம், பிடிக்கைமுதலிய பதங்களை உபயோகிக்கின்றார்கள்.

சீவக சிந்தாமணிக்குச் சற்றுப்போவோம். ஆசிரியர் நம்மை ஏமாங்கதநாட்டுக்கு அழைத்துச்செல்கின்றார் அதன் தலைநகராகிய இராசமாபுரத்தையடைகிறோம், அவண் அழகுற அமைந்தயாழ் மண்டபத்திற்குள் நுழைகிறோம். காந்தருவதத்தை பாவைபோல் காணபபடுகிறாள் அசைவற்று பதுமைபோல் மிளிர்கிறாள். ஆனால் நமது காதிலோ, மிகவும் இனிமையான இசையொலி கேட்கின்றது, என்ன ஆச்சரியம்! பாவை போல் பதுமையாய உட்கார்ந்திருக்கும் சாந்தருவதத்தை "புருவம் ஏறு, கண்ணும் ஆடா, மிடறும் வீங்காது, பற்களும் தோன்ற" ப்பாடிய அடியை ஆசிரியர் 'கருங்கொடிப்புருவ மேறா கயனெடுங்கண்ணிமேடா, அருங்கடி மிடறும் விம்மாதணிமணி யெயிறுந் தோன்றா இருங்கடற்பவள ச்செவ்வா ய்திறந்தவள் பாடினாளோ, நரம்பொடுவீணை நாவினவின்றதோவென்றுநைந்தார்" எனக் கூறுகிறார் இதற்கு உரைஎழுதியுள்ளநச்சினார்க்கினியர் 'இசைமரபு" என்றபழந்தமிழிசை நூலிலிருந்து மேற்கோள்எடுத்துவிளக்கம கூறியுள்ளார், "கண்ணிமையாக ணடந்துடியா கொடிறசையா பண்ணளவும் வாய்தோன்ற பற்றெரியா - எண்ணிலிவைகளளார் நறுந்தெரியற் கைதவனே கந்தருவர் உள்ளாளப்பாடலுணர்" (நச்சினார்க்கினியருரை மேற்கோள்) இவண் விளக்கப்பட்டிருக்கிற உள்ளாளப்பாடல் எட்டு கிரியைகளுடனும் "உள்ளாளம, விந்து, நாதம்" என்ற மூன்றினையுங் கூட்டப் பெற்று பதினொருபாடற்றொழிகளெனப்படும். பாடவேண்டிய முறையை விளக்குகையில், "பருந்துபறக்குமிடத்துமுறையேஉயர்ந்து அந்நிலத்தின்கண் நின்று ஆய்ந்து பின்னும் அம்முறையே மேன்மேல் உயருகின்றுப்போல் பாடவேண்டும், "என்று பகர்கின்றார் நச்சினார்க்கினியர். பருந்தும் நிழலும்போற்பாட்டும எழாலும்திருந்துதார்ச்சீவகற்கேசேர்ந்தன" எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம என்ற ஐந்தும் பாடற்றொழில் புரியும் பொழுது நிகழும் கிரியைகளாம் (இவற்றைப்பின்னர் விளக்குவாம்.)

பழையகால விஞ்ஞான நூல்களைக்கவனித்தால், அவண் சிருட்டிக்கிரமத்தை விளக்கும்பொழுது, முதலில் ஆகாசம தோன்றியது என்றும், அதனின்று பவனமும் (காற்றும்). அதனின்று நெருப்பும்,

அதனின்றுதண்ணும், கடைசியாக பூமியும் (பிரிதிவி) தோன்றலா யின, இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பிரத்தியேககுணமுண்டு.

| பூதத்தின்பெயர் | அதன்குணம் | காரணகுணம் |
|---|---|---|
| 1. ஆகாசம் | சப்தம் | — |
| 2 பவனம் | ஸ்பர்சம் | சப்தம் |
| 3 நெறுப்பு | ரூபம் | ஸ்பர்சம், சப்தம் |
| 4 தண் | ரஸம் | ரூபம், ஸ்பர்சம், சப்தம் |
| 5. பூமி (பிரிதிவி) | கந்தம் | ரஸம், ரூபம், ஸ்பர்சம், சப்தம் |

சப்தம் எல்லாவற்றிலும் வியாபித்துள்ளது என்று விளக்கப்பட்டிருக் கின்றது. சப்த குணகமான ஆகாயத்தில் ஸ்பர்சம் இல்லை என்பது வெளிப்படை, உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள், உயிர்மெய் யெழுததுக்கள் ஆகியவற்றின் கலவையால்' (Permutation and Combination) முப்பத்தாறு தத்துவங்கள் ஏற்படுத்தப்பட்டு விளக்கப் படுகின்றன. (இவண்விளக்கின் விரியும்). (இவை "நாராயணம்" முதலிய உபநிடதங்களில் விளக்கப்பட்டுள்ளன).

மூலாதாரத்திலுள்ள சக்தியை வித்து என்று கொண்டால், வித் தினின்று முளை கிளம்புவதுபோல் மூலாதார பிந்துவிலிருந்து நாதம் உண்டாகிறது. இதை பரப்பிரமத்தின் சொரூபம் என்று கூறுகின்றனர் சூட்சுமமான அறிவுடன் இதை நோககினுல் அது எத்தன்மையது. எப்படிப் பரிணமிக்கச் சித்தமாயிருக்கிறது என் பது புலனுகும்; இத்தன்மையை பச்யந் தீ என்று விளக்குகினறனர். மூலாதாரத்தைக கருத்தால் இயக்கச்செய்யும் நிலை விளக்கப்படுகிறது பிறகு அலைவடிவமாக (Sound Wave) இது கிளம்புகிற பொழுது மதயமை என்ற பெயரளிக்கப்படிருக்கிறது. பின்னர் இது பிராணவாயு வோடும் இசையொலியோடும் கூடி வைகரீ என்றுகேட்கும் (Audibi- lity) தனமையை யடைகிறது. அண்ணம், நாக்கு முதலியவற்ருேடு மோதி ஒலி வடிவமாய் வெளிப்படுகின்றதைத்தான். நமது காதின் உதவியால் கேட்டு மகிழ்வடைகிருேம். (இதன் முழுவிளக்கத்தையும் யோகசிகோபநிடதத்தில் காணலாம். இவண்விளக்கின்வழிப்பேருகும்) சித் என்ற சக்தி மூலாதாரத்தில் பிந்துவடிவங்கொள்கிறது. இப்பொ ழுது பரை எனப்படுகிறது நாபிதானத்தில் நாதவடிவங் கொண்டு பச்யந்தீ என மாறுகின்றது. இருதயத்தில் தொனிவடிவங்கொண்டு மத்யமை என்று விளககப்படுகின்றது. வாய் மூலமாய் அட்சரவடிவங் கொண்டு வைகரீ என்ற நாமத்துடன் வெளிப்படுகிறது. இதனுல் ஆரம்பம், பரிணமிப்பு, விளக்கம் என்றநிலைவகைகளை நாதம்அடைந்து

வியாபிக்கிறது. எனவே தக்க முறையில் பயிற்சி செய்து, மிடற்றை வசப்படுத்தி, நமது குரல் (Voice) எந்த நிலையிலும் காலத்திலும் நாம் நினைத்த பரிணமங்களை (உணர்ச்சிகளை) மாத்திராகாலங்குன்றாது ஸ்பஷ்டமாகவும் தெளிவாகவும் இனியமுறையிலும் பயக்க வல்லது என்பதை நாம் உணர்ந்தால் நமதுகுரலால் அரிய பெரிய காரியங்களை இன்னிசை மூலம் சாதிக்கலாம். என்பது வெளிப்படை.

(தொடரும்)

# ஒலிவிளக்கம்

"கடும் புலிகள் அயர்ந்து சித்ரகாயமென்னும் பெயர் விளங்க, கொடும் பணிகள் மாலையதாய்க் குலரத்தன் விளக்கேற்றக, கருங்கல் தான் வெண்ணெயெனக் கரைந்தோட" என்று ஒரு கவி வருணித்துக் கொண்டே போகிறார். துடிக்கும் பொருள்களிலிருந்து ஒலி வெளிப்படுகின்றது என்பது பழங்கால இசையோர்களின் கருத்து ஒலிகளில் சில இனிமை, சில டுவறுப்பு. இனிமையான ஒலிகள் தமக்கென்ற பிரத்தியேகக் கேள்விகளை (சுருதிகளை) அமைத்துக் கொண்டிருக்கின்றன துடிப்பையடையும் பொருளின் துடிப்பு வேகத்தைச்சார்ந்து ஒலியின் சுருதி அமைகிறது; துடிப்புகளின் எண்ணிக்கையால் சுருதி நிர்ணயிக்கப்படுகிறது. சுருதிகளைப் படிப்படியாக ஏற்றியோ இறக்கியோ உபயோகிக்கிறோம்; இப்படிக் கட்டுகளைத் தான் தான நிலைகள் (சுரஸ்தானங்கள்) என்று சொல்லுகிறோம். இவற்றைத் தான் சரிகமபதநி (குரல், துத்தம், கைக்கிளை; உழை, இளி, விளரி, தாரம்) என்று உபயோகப்படுத்துகிறோம். ச என்ற ஒலியின் துடிப்பை விட ரி என்ற ஒலியின் துடிப்பு அதிகமாகவும், அதே மாதிரி, ரியை விட க அதிகம், க வைவிட ம அதிகம், ம வைவிட ப அதிகம், ப வை விட த அதிகம், த வைவிட நி அதிகம் என்று படிப்படியாய் உயர்ந்து சென்று ஆரம்பித்த ச என்ற நாண் குரலைப்போல் இரண்டு மடங்கு கொண்ட ச் என்ற வன் குரலில் முடித்து ஓர் இயக்கை (தானநிலையை) ஏற்படுத்துகிறோம். இதை ஏற்றம் அல்லது ஆரோசையென்றும் வன் குரலிலிருந்து படிப்படியாய் ச நி த ப ம க ரி என்று இறங்கிக் கொண்டு வருவதை இறக்கம் அல்லது அமரோசை என்றும் கூறுகிறோம். இசைக் கணித முறையில் இதை வலவோட்டு இடவோட்டு விபாகங்களாகக் கருதுகிறோம். ஆரோசை அமரோசை சேர்ந்த ஒரு கிரமத்தைத்தான் ராகம் (musical scale) என்கிறோம. இம்மாதிரி ஏற்பட்ட

ராகங்களை மேளகர்த்தாக்கள் என்று கூறுகிறோம். காலக்கிரமத்தில் மேளகர்த்தாக்களின் எண்ணிக்கை முறையே 6,15 20,32,72 என பல தரப்பட்டு, தற்காலம் 72 என்பது வழக்கிலுள்ளது

பூத நூலில் ஓசை, ஒளி இவற்றின் இலக்கணம் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இசையொலியை அளப்பதற்கு "இசைக்கோல்" (Tuning Fork) என்பதனையும் இசை நரம்பினோசையை அளந்து கணக்கிட ஒலியளப்பான் (Sonometer) என்ற கட்டளையாழும் உதவுகின்றது; இசைக் கோலுக்குத் துணை ஒலியளப்பான். திண்ம, நீர்ம, நொய் மங்களில் (Solid, liquid, gas) ஒலிபரவுகின்றது. வெறுவெளியாகிய ஆகாசத்தில் பரவாது. பவனத்தில் செல்லும் வேகத்தை விட நீரில் செல்லும் வேகம் அதிகம். சிற்றலை வடிவமாய் ஓசை பரவுகின்றது. இசைக் கணித வல்லுநர்கள், ஒரு செகண்டுக்கு 256 சிற்றசைவுகளோடு இயங்கி, சூழவிருக்கும் பவனத்தில் 256 அலைகளை எழுப்பி "ச" என்ற சுரம (கேள்வி) உண்டாக்கப்படுகிறது என்று கணித்துள்ளனர். இவ்வாறு நரம்பின் இயக்கத்தை ஆராய்ந்து கண்டுபிடித்திருக்கின்றனர். நரம்பை இரண்டு சம கூறு, மூன்று சம கூறு, நான்கு சம கூறு, ஐந்து சம கூறு, ஆறு சம கூறு என்று பிரித்துள்ளனர். இவை முறையே செம்பால், முப்பால், வாரம், ஐம்பால், முப்பாற்செம்பால் என்ற கலைச் சொற்களால் குறிக்கப்படுகின்றது. இவை இன்னும் நுண்ணிதாக இயங்கி அனேக வழிச்சுரங்களை தோற்றுவிக்கும். முதற் சுரத்தோடு சேர்த்து வழிச்சுரங்களும் இசைப்பன.

256 அசைவுகளை உடைய "ச"வுக்குசெம்பாலில் 512 உம் 512 அசைவுகளை உடைய உச்ச "ச"வுக்கு முப்பாலில் 768 உம்768 ஆகிற உச்ச "ப" வுககு வாரத்தில் 1024 அசைவுகளும் 1024 ஆகிய அதி உச்ச "ச" வுக்கு ஐம்பாலில் 1280 உடைய அசைவும் 10280 ஆகிய அதி உச்ச "க" வுக்கு முப்பாற் செம்பாலில் 1536 அசைவும் ஏற்பட்டு அதியுச்ச "ப" என்று வழிசுரங்கள் வருகின்றன. இவை மிகவும் அதியிலக்கணம் (technical) வாய்ந்துள்ளபடியால் சமயம் வரும்பொழுது விளக்குவாம். உச்ச "ச" வும் அதியுச்ச "ச" வும் சம "ச" வுடன்மருவி நிற்கின்றன. உச்ச "ப" வும் அதியுச்ச "ப" வும் ஒன்று கூடிய பஞ்சம விசை, தாரத்துள் உழையும், உழையுள் குரலும், குரலுள் இளியும், இளியுள் துத்தமும் தோன்றி இவை முறையே தாரம், குரல், துத்தம், உழை, இளி என நிரல்பட்டு நின்றன. (இவற்றைப்பின்னர் தக்கவிடத்தில் விளக்குவாம்.) தார நரம்புதான் முதலில் தோன்றிற்று என்பது பழந்தமிழிசைமரபு.

இசைக்கணித முறைப்படி கின்ற நரம்பினை "ச"என்று வைத்துக் கொள்வோம், நரம்பு நீளவிகிதப்படி சுத்தரிஷபம் $\frac{15}{16}$, சதுஸ்ருதிரிஷ

பம் $\frac{8}{9}$, சாதாரணகாந்தாரம் $\frac{5}{6}$, அந்தர காந்தாரம் $\frac{64}{81}$, சுத்தமத்யமம் $\frac{20}{27}$ பிரதிமத்யமம் $\frac{45}{64}$, பஞ்சமம் $\frac{2}{3}$. சுத்ததைவதம் $\frac{5}{8}$, சதுஸ்ருதிதைவதம் $\frac{16}{27}$, கைசிகிநிஷாதம் $\frac{5}{9}$, காகலிநிஷாதம் $\frac{128}{243}$, $\frac{1}{2}$நின்ற நரம்பின் ஒலிமேற்ருனத்துஷட்ஜமாகும். (இப்பெயர்கள் தற்கால வழக்கப்படி குறிக்கப்பட்டிருக்கிறது ) அசைவெண் விகிதங்கள் நரம்பு நீளவிகிதங்களுக்குத் தலை கீழ்மாற்றலாகும் எனவே சுத்தரிஷபம் $\frac{16}{15}$, சதுஸ்ருதிரிஷபம் $\frac{9}{8}$ சாதாரண காந்தாரம் $\frac{6}{5}$, அந்தரகாந்தாரம் $\frac{81}{64}$, சுத்த மத்யமம் $\frac{27}{20}$, பிரதிமத்யமம் $\frac{64}{45}$, பஞ்சமம் $\frac{3}{2}$, சுத்ததைவதம் $\frac{8}{5}$, சதுஸ்ருதிதைவதம் $\frac{27}{16}$ கைசிகி நிமிஷாதம $\frac{9}{5}$, காகலி நிஷாதம $\frac{243}{128}$. மேற்சட்ஷம் 2.

குரலிசைக்கும் உழையிசைக்கும் இடையே இயைந்த இடை விகிதம் $\frac{3}{2} \div \frac{9}{8} = \frac{4}{3}$ ; அலகெண் 9. இது துத்தம், கைக்கிளை, உழை முதலியமூன்றின் கூட்டுத்தொகை. இளியிசைக்கும் குரலிசைக்கும் இடையேஇயைந்தஇடைவிகிதம் $\frac{9}{4} \div \frac{27}{16} = \frac{4}{3}$ ;அலகெண்9;இதுவிளரி. தாரம், குரல் ஆகிய மூன்றின் கூட்டுத்தொகை. குரலிசைக்கும் இளியிசைக்கும் இடையே இயைந்த இடை விகிதம் $\frac{27}{16} \div \frac{9}{8} = \frac{3}{2}$ ; அலகெண் 13; உழையிசைக்கும் குரலிசைக்கும் இடையேயியைந்த இடை விகிதம் $\frac{9}{4} \div \frac{3}{2} = \frac{3}{2}$ ; அலகெண் 13. இதிலிருந்து சிலசுரஉற்ற விகிதங்கள் கிடைக்கின்றன. குரலுக்கு உழை நட்பு. உழைக்குக்குரல் கிளை;நட்பலகெண் 9 கிளையலகெண்13 ஆகமொத்தம் 22, நட்பிடை $\frac{4}{3}$; கிளையிடை $\frac{3}{2}$; பேறு $\frac{4}{3} \times \frac{3}{2} = 2$, எனவே தான அலகெண்கள். 22; நடபுக்கிளைப்பேறு 2 இடைவிகித முள்ளது.

செம்பால் என்பது $\frac{1}{2}$, வாரம் என்பது $\frac{1}{4}$, வாரச்செம்பால் என்பது $\frac{1}{8}$, வாரவாரமென்பது $\frac{1}{16}$, அலகு எனப்படுவது இரண்டு சுரங்களிடையே வரும் ஓசை வேறுபாட்டினை அளந்துகாட்டுகிறபடியால் அப்பெயர் பெற்றது. நான்கலகினை முற்றிசை $\frac{9}{8}$ (major tone) என்கிறோம். இந்த நான் கலகு இருகூருகப்பகுக்கப்படும்பொழுது ஓரலகுபெற்ற குற்றிசை $\frac{135}{128}$ (minor Semitone) ஆகிறது. மூவலகைப் பிரிக்கும் பொழுதுஓரலகுபெற்றுபற்றிசை$\frac{16}{15}$(major semitone)என்றும்,நரம்பிசை பிற்ருேன்றுவது குற்றிசை எனறும் கிளையியைபிற்ருேன்றுவது பற்றிசை என்றும் கூறுகின்ருேம் (இவை இங்கு சற்று விளங்காது; இசைக்கணிதம் வகுக்கும்பொழுது விளக்குவாம்) பற்றிசையிலிருந்து (major semitone)இலிருந்துகுற்றிசையை(minor semitone) ஐ நீக்கிலை வருவதை வடமொழி நூலாசிரியர்கள் பிரமாண சுருதியென்றும் தமிழிசை நூலாசிரியர்கள் விதியிசை (Comma) என்றும் கருதியுள்ளனர்.

கீழ்க்கண்ட கலைச்சொற்கள் அடிக்கடி உபயோகிக்கவேண்டியதாயிருக்கிறது.

Major tone — முற்றிசை
Minor tone — நெட்டிசை
Major Semitone — பற்றிசை
Minor Semitone — குற்றிசை }
Pythagorean Limma — குற்றிசை }
Comma — விதியிசை (பிரமாணசுருதி)
Octave — தானம்
Fifth — கிளை
Fourth — நட்பு
Tonic } — நாண்குரல், மத்ய ஸ்தாயி "ச" or
Fundamental } — ஆதாரசுருதி

விதியிசை ஓர் அளவு கோலாகப் பயன்படுகிற படியால் இது குற்றிசையைப் பற்றிசையாக்கவும் நெட்டிசையை முற்றிசையாக்கவும் பயன்படுகிறது.

பன்னிரண்டு சுரதானங்களும் பன்னிரண்டு சுரங்களும்:-

| தற் கால சுரம் | வீடு | அலகு நிலை | இசை விபரம் | அசை வெண் | அலகு நிலை | இசைவிபரம் | அசை வெண் |
|---|---|---|---|---|---|---|---|
| சு. ரி. | 1 | 1 | குற்றிசை 1 | 256/243 | 3 | பற்றிசை | 16/15 |
| சது. ரி. | 2 | 2 | நெட்டிசை 1 | 10/9 | 4 | முற்றிசை | 9/8 |
| சா. கா. | 3 | 5 | முற்றிசை 1, நெட்டிசை 1 | 32/27 | 7 | முற்றிசை 1 பற்றிசை 1 | 6/5 |
| சு. கா. | 4 | 6 | முற்றிசை 1 நெட்டிசை 1, | 5/4 | 8 | முற்றிசை 2 | 81/64 |
| சு. ம. | 5 | 9 | முற்றிசை 2 குற்றிசை 1 | 4/3 | 11 | முற்றிசை 2 பற்றிசை 1 | 27/20 |
| பிரதி. ம. | 6 | 10 | முற்றிசை 2 நெட்டிசை 1 | 45/32 | 12 | முற்றிசை 3 | 64/45 |
| ப. | 7 | 11 | மு 2, நெ1, கு1 | 40/27 | 13 | மு 3 கு 1 | 3/2 |
| சு. த. | 8 | 14 | மு 3. நெ 1 | 128/81 | 16 | மு 4 | 8/5 |
| சது. த. | 9 | 15 | மு3. நெ1 கு1 | 5/8 | 17 | மு4, கு1 | 27/16 |
| கை. நி. | 10 | 18 | மு 4 நெ 1 | 16/9 | 20 | மு 5 | 9/5 |
| கா. நி. | 11 | 19 | மு4. நெ1, கு1 | 15/8 | 21 | மு 5, கு 1 | 243/128 |

இவற்றைக் கேள்விப்பாலை என்ற தலையங்கத்தின் கீழ் விவரமாக விளக்குவாம்.

# தொன்னூலிசை - சக்குவவேனன்

அநேக ஆண்டுகளுக்கு முன் நம் தாயநாடு நாகரீகம், கல்வி, கேள்வி, கலாசாரம் முதலியவற்றில் திளைத்த நாடாய் விளங்கியுள்ளது. உலகின் எம்மருங்கிலும் நமது கலைவல்லுநர்கள் போற்றப்பட்டுவந்திருக்கின்றனர். சங்கநூல்களிலிருந்தும் பிறவற்றிலிருந்தும் இசைக்கலையிலும் நமது நாடு செழித்தோங்கியிருந்தது. சங்கம் வீற்றிருந்து பேரிசை நூல்களை வெளியிட்ட அரசர்களும் பொருநர்களும் பாணர்களும் பலர். ஏன்? இசை நிகழ்ச்சிகளும் நடனமாட்டங்களும் அரசவையில் நிகழ்த்தப்பட்டபொழுது, கலைஞர்களின் குற்றங்களைக் கண்டு, அரசுகட்டில் விட்டிறங்கி, தாமே அவற்றை நிகழ்த்திய அரசர்களும் பலராவர். அக்கினிவர்ணன் என்ற ஆரிய குலத்தரசனும் சோமேசுவரன் என்ற சாளுக்கிய அரசனும் இத்தன்மையானவர்கள். இதிகாச காலத்து இராவணனும் அனேகப் பண்களையும் வாச்சியங்களையும் அளித்துள்ளான். என்பது புராணச்செய்தி. ஒரு காலத்தில் கடாரத்திலும் இசைக்கலையிற்றலை சிறந்தவனே அரசு கட்டிலேறத்தகுதியுள்ளவன் என்று கருதப் பட்டிருக்கிறது, (Vide Encyclopedia of Social Sciences.) நமது நாட்டிலும் ஒரு காலத்தில் இசை அப்பேர்ப்பட்ட கௌரவத்தைவகித்திருந்திருக்கிறது என்று மிசிர நாட்டுக்கல்லறை ஓவியங்களிலிருந்தும் வண்ணப்படங்களிலிருந்தும் அறிகிறோம். அத்தகைய அரசர்கள் சக்குவவேனன் என்பவன் சிறந்தவன். இசையாலே பேறு பெற்றவன். நாள்தோறும் ஈசனை இசை பாடிப்புகழ்ந்து சீரும் சிறப்புடனும் வாழ்ந்தவன். இசைவாணர்களையும் பொருநர்களையும் பாணர்களையும் ஆதரித்து பரிசில் வழங்கியவன் பள்ளிப்பாடங்களை இசைரூபமாகப் போதிக்கச் செய்தவன. மக்களனைவரையும் தன்னுயிராய்ப் பாதுகாத்தவன். தனக்கென்று வாழாது மக்களுக்கென்றே வாழ்ந்து புகழெய்தியவன். இதிகாசகாலப் புகழ்பெற்ற அரிமித்திரனின் பேராசிரியனுமாவன் (அரிமித்திரனைப் பற்றி அடுத்த இதழில் ஓர் கட்டுரை வரும்.) அரசியற்கருவூலத்திலிருந்து தனக்கென ஒரு சல்லிக்காசு கூட எடுத்துப் பயன்படுத்ாதவன், அவையனைத்தும் பொதுமக்கள் நன்மைக்காகவே பயன்படுத்திப் பெயர்பெற்றவன். இலங்கேசுவரனான இராவணனே இவனுக்குத்திறை கொடுத்தவனென்றால் இவன் புகழ் எத்தன்மையது பாருங்கள்!

ஆனால் மிகவும் எளியவாழ்க்கையை நடத்திவந்தான். தனது நிலத்தில் தானே உழுது பண்படுத்தித் தானியவகைகளைப் பயிரிட்டுத்தானும் தன் இல்லாளும் உண்டுகளிப்பார்கள பாடுபட்டு

உழைக்கும் சிறந்த பாட்டாளியுமாவான். பருத்தி விளைவித்து தாமே அதை நூலாக்கி நெய்து தனக்கும் மனைவிக்கும் வேண்டிய ஆடைகளைத் தாமே ஆக்கிக்கொள்வான். ஒவ்வொரு வீட்டிற்கும் இவனே தலைவன்; அவரவர்களின் குற்றங்குறைகளையுணர்ந்து அவர்கள் விரும்பாமலே ஆவன செய்வான். சகலதேசங்களிலும் இவனுக்கு ஒப்பாரில்லை என்று அழியாப் புகழெய்தியவன். எங்கும் இசைச்சாலைகள்; இசை வல்லுநர்கள், சுருங்கச் சொல்லின் இவனது நாட்டிலுள்ள பவனமே இசை மணங்கமழ்ந்து வீசியது. நாதோபாசனையை முதற்கடமையாகக் கொண்டு மக்களையும் அத்துறையிலீடுபடுத்தியவன். அரசருக்கேற்ற ஆடம்பர ஆடை அணிகலங்களை அரசனோ அவனது தேவியோ அணியவில்லை. மிகவும் எளிய வாழ்க்கையை நடத்திவந்தனர்.

ஒரு சமயம் ஒரு சிறந்த மாதர் நிகழ்ச்சியில் அரசமாதேவியும் அமைச்சர்களின் மனைவியரும் கலந்து கொண்டனர். அமைச்சர்களின் மனைவியரோ விலையுயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்திருந்தனர்; எளியமுறையிலிருந்த அரசமாதேவியையும் சிறந்த நகை நட்டுக்களை அணிந்து கொள்ளுமாறு தூண்டினர். பாவம் அரசமாதேவியர் யதார்த்தம். அன்றிரவு அரசனிடம் தனக்கு நல்ல ஆபரணங்களை அணிந்து கொள்ள வேண்டுமென்ற அவா இருப்பதாகத் தெரிவித்தாள். ஆனால் அதற்குத்தகுந்த பொருள் தன்னிடமில்லை என்றும் அரசாங்கப் பொருள் மக்களைச்சார்ந்ததென்றும் அதைத்தனக்காகப் பயன்படுத்துவது பாவம் என்றும் அரசன் பதிலளித்தான். இதனால் தன் மனைவி திருப்தியடையவில்லையென்பதையும் அரசனுணர்ந்து கவலை கொண்டான்.

மறுநாட்காலையில் தலைமையமைச்சரைவரவழைத்து நடந்தவற்றைக் கூறினான்; இதே சமயத்தில் அரசாங்கப் பொருளிலிருந்து ஒரு சல்லி கூட எடுக்க மனமில்லை என்பதையுமுணர்த்தினான். சிறிது நேரம் வாய் மூடி மௌனமாயிருந்த அமைச்சர்பெருமான் அரசனைப் பார்த்து, ''மன்னர் பெருமானே, இலங்கேசுவரனான இராவணன் நமக்குக் கப்பங் கட்ட உள்ளவன். இதுவரை அவனிடம் தாங்கள் பெருந்தன்மையால் திறை வசூலித்ததில்லை. இச்சமயத்தைக்கருதி அவனிடமிருந்து தேவைப்பட்டதை பாத்தியத்துடன் பெற்று மகாராணிக்குப் பயன் படுத்தலாமே'' என்று பணித்தான் அரசனும் அதுவே தகுந்த உபாயமென்று கருதி தலைமை அமைச்சனையே இலங்கைககுப் போகவிடுத்தான். அமைச்சன் சென்றதும் அரசனே அமைச்சன் வீட்டுக்குத்தேவையானவற்றைத் தாமே பணியாள்போல் கவனித்தானென்றால் அரசனது பெருங்குணம் எத்தன்மையது பாருங்கள்!

தலைமையமைச்சரும் இராவணனது அவைக்களம் புகுந்தார்' தாம் வந்த காரியத்தையும் தயங்காமல் தெரிவித்தார். அவ்வளவு தான் இலங்கேசனுக்குச் சினம் தலைக்கேறியது. ''டேய் மூடனே என்னையும் பார்த்துக்கப்பங்கேட்கும் தைரியமுடைய அரசனும் இவ்வுலகிலுள்ளனரா? நாம் திறைகொடுக்க முடியாது என்றும் யுத்தகளத்தில் உமது அரசனைச் சந்திக்கிறோம் என்று போய்ச்சொல்லும்'' என்று உத்தரங் கொடுத்தான். சக்குவவேனனின் அமைச்சரும் இராவணனின் அவையினின்று வெளிப்போந்தார்.

சிறிது நேரங் கழித்து மண்டோதரிவந்தாள். நடந்தவற்றை இராவணன் அவளிடம் கூறினன். அதைக்கேட்டமண்டோதரி ''அடடா'' என்னகாரியம் செய்தீர்கள்? சக்குவவேனனுக்கு இணையான அரசர்கள் எவ்வுலகிலு மில்லை என்று தாங்கள் கேட்டதில்லையா? அவனது நன்மதிப்பையும் சம்பாதித்துக்கொண்டால் அதுவே இகபரவழி காட்டும் என்று தங்களுக்குத்தெரியாதா? ...... ..... இப்பவும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. அவ்வமைச்சன் அதிகதூரம்சென்றிருக்கமாட்டான். உடனே அவனைக்கூப்பிட்டு அவன் கேட்டதை அவனது அரசனுக்கு அனுப்பித்து பாக்கியமடையுங்கள்'' எனறு தாழ்மையுடனுரைத்தாள். இராவணனு இதற்கெல்லாம் செவிமடுப்பவன! 'நான கூறியது கூறியதுதான்; ஒருவருக்கும் தலைவணங்கி இறையிலி கொடுக்க மாட்டேன்'' என்று பதிலளித்துவிட்டான். சக்குவவேனனின் பெருமையை இராவணனுக்கு உணர்த்தவேண்டுமென்று கருத்திற் கொண்ட மண்டோதரி புருக்கூண்டைத்திறந்து புருக்களை வெளியிலிட்டாள். தானியங்களை வாரித்தெளித்தாள். புருக்கள் தானியத்தைத் தின்ன ஆரம்பித்தன. அவைகளை விளித்து ''புருக்களே, இராவண மகாராசா உத்தரவு நீங்கள் தானியத்தை உண்ணுதீர்கள்'' என்றுள். ஆனுல் புருக்கள் இதைச் சட்டை செய்யவில்லை. உடனே இராவணனைப்பார்த்து மண்டோதரி ''பார்த்தீர்களா, தங்களது கட்டளையை அவைகள் பொருட்படுத்த வில்லை இப்பொழுது பாருங்கள். புருக்களே, சக்குவவேன மகா ராசாமீது ஆணை. நீங்கள்தானியத்தைஉண்ண கூடாது'' என்றுள். உடனே புருக்கள் தின்னுமல் மரத்திற்குப் பறந்து சென்றன. அவள் மறுபடியும் புருக்களைப்பார்த்து, ''உங்களை இராவணேசுவரர் அழைக்கிருர்? இறங்கிவந்து உண்ணுங்கள்'' என்றுள் இதையும் அவைகள் பொருட்படுத்தவில்லை. பிறகு 'சக்குவவேனனது ஆணை நீங்கிவிட்டபடியால் நீங்கள் வந்து தானியங்களைச் சாப்பிடலாம்'' என்று அவள் பணித்தவுடன் இவை உடனே கீழே வந்து தானியங்களைக் கொரிக்க ஆரம்பித்தன. இதை இராவணனும் பொருட்படுத்தவில்லை. மண்டோதரியின் வேண்டுகோளைப் புறக்கணித்து விட்டான். மண்டோதரிக்கு மாத்திரம் வருத்தந்தான். என்ன செய்வாள் பாவம்.

மறுநாள் சக்குவவேனனின் தலைமையமைச்சர் இராவணனது அவைக்களம் புகுந்தார். அவரைக்கண்டதும் சினம் தலைக்கேறியஇராவணன் "அமைச்சரே,உயிரை இழக்கத்துணிந்தாமறுமுறை வந்திருக்கிறீர்கள்?" என்று வார்த்தையை வீசினுன். ஆனுல் அமைச்சர் மிகவும் அமைதியாகவும் அலட்சியமாகவும் பதிலுரைத்தார். "அரசே, என்னுயிரைப்பற்றி எங்கள் வள்ளல் வேனனிருக்கும் வரை. நானேன் கவலைப்படவேண்டும்? ....... அஃதிருக்கட்டும் தங்களது இலங்கைபோல் மணலால் நானும் ஓர் இலங்கை உருவாக்கியிருக்கிறேன். தாங்கள் புடைசூழ வந்து அதைப் பார்த்தருளவேண்டும்" என்று வணக்கமாகக்கூறினுன். இராவணனும் மண்டோதரியுடனும் மற்ற பிரமுகர் களுடனும் கடற்கரை சென்று மணலால் ஆக்கப்பட்ட இலங்கையைக்கண்டான். திகைத்துப்போய் ஆச்சரியக்கடலிலாழ்ந்து விட்டான். உடனே அமைச்சரைப்பார்த்து "உமது கலைத்திறமையை மெச்சுகிறேன். இதற்காக உமக்கு வேண்டியவற்றைக்கேளும். வழங்குகிறேன்" என்ருன். இதைச்சேட்டுச் சினங்கொண்ட அமைச்சர் "எங்களது ஆருயிர் மன்னர் சக்குவவேனனிருக்கும்பொழுது தங்கள் போன்றவர்களிடமா வந்து நாங்கள் பிச்சைக்காசு வாங்குவோம்? தங்கள் பொருள் எங்களுக்குத் தேவையில்லை,..........பாருங்கள் சற்று இருந்து என்ன நடக்கப் போகிறதென்று பாருங்கள்" என்று சொல்லிவிட்டு மணலால்செய்த இலங்கையின் கீழ்வாசலைக்கலைத்தான். உடனே இராவணனின் இலங்கையின் கீழ்த்தளங்கள் இடிந்து விழுந்தன. மணலிலங்கையின் தெற்குவாசலைக் கலைத்தான். உண்மையான இலங்கையின்தெற்குத்தளங்கள் இடிந்து விழுந்தன. இவ்வாறே மேற்கு வாசலும் ஆயிற்று. இன்னும் வடக்கு வாசல் ஒன்று தான் பாக்கி. மண்டோதரி இதைக்கண்ணுற்று அடங்காத்துயரங்கொண்டு இராவணன் காலில் விழுந்து "இனியும் பரீட்சை பார்க்க வேண்டாம், வேனமகாராசா கேட்டதையளித்துப்பேறு பெறுங்கள்" என்று பணிவுடன் வேண்டிக் கொண்டாள்.

என்ன செய்வான் இராவணன் பாவம்! அவனுடைய கல்நெஞ்சே இளகியது. அமைச்சரை வணங்கினுன். தனது தப்பிதத்திற்குப் பச்சாத்தாபப்பட்டான். மறுபடியும் இலங்கையை ஏற்கனவே இருந்தபடி ஆக்கவேண்டிக் கொண்டான். திறை வழங்குவதாகவும் கூறினுன். உடனே அவ்வமைச்சர் தனது அரசரை மனத்திற்கொண்டு ஆக்கவேலையிலீடுபட்டுக் கோட்டையைப் பழயநிலையடையும்படி செய்துவிடவே, அவன் கேட்டதிறையை இராவணன் கொடுத்தனுப்பி விட்டான். இராவணன் தலைவணங்கிய இசைப்பேரரசர் சக்குவவேனனே.

சக்குவவேனனது தலைமையமைச்சன் இராவணன்கொடுத்த நிதியைப் பெற்றுக்கொண்டு பாரதநாடுதிரும்பினுன். சக்குவவேன

னும் இராசமாதேவியும் சேர்ந்திருந்தபொழுது நிதியைக்கீழேவைத்து வணங்கி விவபரம் தெரிவித்து நின்ருன், பெயரைக்கேட்டமாத்திரத்தில் புள்ளினங்களும் மரியாதை செலுத்தும் பேரரசனைக்கணவனுகக் கொண்டிருக்கும்பொழுது ஆடம்பரமானநகை எதற்கு என்ற எண்ணம் தோன்றிவிடவே, இராசமாதேவியும் ஆபரணங்கள் வேண்டாமென்று சொல்லிவிட்டார். இராவணனது சொத்தையும் சக்குவவேனன் திருப்பியனுப்பிவிட்டான் இதைக்கண்டு ஆச்சரியமடைந்த இராவணன் சக்குவவேனனை நேரில் கண்டு வணங்கி ஆசிபெற்றுக் களிப்பெய்தினுன். இவ்வளவுபெருமையும் சக்குவவேனன் ஈசனை இசையால்துதித்ததால் ஏற்பட்டது என்று ஜயதயாள் கோயன்கா அவர்கள் எழுதியுள்ளார்கள். மற்றய புராணங்களில் இவ்வரலாறு காணப்படவில்லை "கல்யாண கல்பதரு"வில் எழுதிவந்த ஜயதயாள்கோயன்காவின் இலக்கியத்திரளிலிருந்து எடுக்கப்பட்டது.

# சுவையான இசைத்துணுக்குகள்

மிகவும் சமீப காலத்தில் பெரிய வைத்தியநாதய்யர் என்ற ஓர் இசைப் பெரியார் வாழ்ந்து வந்தார். தஞ்சை மாநகரம் இசைப்பேராறவில் சிறந்து விளங்கிய காலம் அது. பெரிய வைத்தியநாதய்யர், சின்ன வைத்தியநாதய்யர், மகாவைத்தியநாதையர், வீணைவைத்திய நாதையர், பிரமாண்ட வைத்திய நாதையர், ஆனை வைத்திய நாதையர், அறந்தாங்கி வைத்திய நாதையர், ஆஹா வைத்திய நாதையர், மூஞ்சோறு வைத்திய நாதைய்யர், குதிரை வைத்திய நாதைய்யர் முதலியவர்கள் ஒவ்வொரு வகையிலும் சிறந்து விளங்கியுள்ளார்கள். பெரிய வைத்திய நாதய்யர் தஞ்சை மாவட்டத்திலுள்ள தேவூரில் பிறந்தவர். இளமையிலேயே நல்லமுறையில் இசையில் தேர்ச்சிபெற்று பல சமஸ்தானங்களில் வித்துவானுய் விளங்கி ஆதரிக்கப்பட்டவர் மூன்று இயக்குகளிலும் தடையின்றிச் செல்லும் கனத்த குரல் பெற்றவர். இவரது காலத்தில் ஒலிப்பெருக்கி இல்லாமற்போனுலும் இவர் பாடும்பொழுது சுமார் கால் மைல் தூரம் கேட்கும் என்றுமகாமகோபாத்தியாய உ.வே.சுவாமிநாதய்யர் கூறியுள்ளார்.

இவருடைய இசைக் கச்சேரி நிகழும்பொழுது பலர்கூடி இவரது பாட்டையனுபவிப்பர். சிலசமயங்களில் போதிய இடவசதி இருக்காது; ஆனால் கூட்டமதிகமாக வரும். மரங்களின்பேரிலும் வீட்டுக்கூரைகளின் பேரிலும் ஏறிக்கொண்டு கச்சேரி கேட்டு இன்புறுவர். ஒருசமயம் வைத்தீச்வரன் கோயில் சித்தாமிர்ததீர்த்தக்கரையில் இவர்பாடியபொழுது மக்கள் இடமில்லாமல் கழுத்தளவு நீரில் இருந்து இசைகேட்டின்புற்றனராம். கும்பகோணம் சார்ங்கபாணி கோயிலில் ஒரு சமயம் பாடியபொழுது கோயிலுக்குப்பின்னுள்ளபொற்றாமரையில் நீந்திக்கொண்டே கச்சேரியில் லயித்திருந்தனராம். இவரிடத்தில் எவ்வளவோ அங்கசேஷ்டைகள் போன்ற குறைபாடுகள் இருந்தபோதிலும் இவருடைய சாரீரபலமும் இசைச்சிறப்பும்அவற்றை மறைத்தன. இவர் பாடியபிறகு அதேமேடையில் வேறு ஒருவராலும் பாடமுடியாது என்று வித்துவான்களே கூறுவர். எனவே இவருக்கு எங்கும் பெருமதிப்பிருந்தது.

மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் என்பவர் திருவாவடுதுறையாதீனம் சின்னப்பட்டத்தை வகித்து கல்லிடைக்குறிச்சியில் இருந்துவந்தார். அவர் ஒரு சிறந்த இசையாதரவாளர் (patron) வித்துவான்களின் அருமையறிந்து வழங்கும் வள்ளல். பெரியவைத்திய நாதய்யர் சங்கீதத்தில் ஸ்ரீ சுப்பிரமணியதேசிகருக்கு ஈடுபாடு அதிகம். அடிக்கடி தக்கசன்மானங்களை வழங்கி வித்துவான்களைக் கௌரவித்து வந்திருக்கிறார். பெரிய வைத்திய நாதய்யருக்குச்செலவுக்குப்பணமுடை ஏற்பட்டால் தேசிகரிடம் சென்று கச்சேரி செய்து பொருள் பெற்றுவந்து தேவைகளைப்பூர்த்தி செய்து கொள்வர். இவர் இசைவிருந்து தேசிகருக்களிப்பர்; தேசிகரும் கொடை விருந்தளிப்பர். இருவரும் ஒருவருக்கொருவர் பெருமதிப்பும் நட்பும் கொண்டுள்ளவர்

ஒரு சமயம் தேசிகருக்கு இடுப்பில் வாயுப்பிடிப்பு ஏற்பட்டு உபத்திரவத்தையுண்டாக்கியது. அவரால் நிமிரவோ, நடக்கவோ, உட்காரவோ முடியவில்லை. மருந்து ஒற்றடம் முதலியவை கொடுத்தும் அவர் குணமடையவில்லை. கல்லிடைக்குறிச்சிக்குச் சென்றார். தகுந்த முறையில் பலவித சிகித்சையளிக்கப்பட்டும் அவருக்கு ஒருவித குணமுமேற்படவில்லை இந்த நிலையில் இவரதுமனம் பெரிய வைத்திய நாதய்யரை நாடிற்று. அவர் எங்கோ தஞ்சை மாவட்டத்திலல்லவா அது சமயம் வசித்து வந்தார்.

அதே சமயம் பெரிய வைத்திய நாதய்யருக்குக் கையில் கொஞ்சம் பணப்புழக்கம் குறையவே, தேசிகரைச் சென்று பார்க்க விழைந்தார். தேசிகரோ திருவாவடுதுறையிலில்லை; கல்லிடைக்குறிச்சி

யிலுள்ளார் என்று கேள்விப்பட்டு அங்கு சென்றார். வண்டியிலிருந்து இறங்கியதும் மிகவும் கனத்த குரலில் உற்சாகத்துடன் காம்போதிரா கத்தைப் பாடிக்கொண்டே உள்ளே நுழைந்தார். தேசிகரும் நோயின் கொடுமையாலவதிப்பட்டுக் கொண்டிருந்த போதிலும் வித்துவானுக்கு ஆசனமளித்து உபசரித்தார். இவற்றிலீடுபடாத வைத்திய நாதையர் ராகவிளக்கத்திலும் வின்யாசத்திலும் ஈடுபட்டிருந்தார் மணிக்கணக் கில் ராகத்தை விவரமாகப் பாடிக்கொண்டிருந்தார். உணர்ச்சி மேலிட்டு மெய்ம் மறந்து விசேஷ சஞ்சாரங்களையெல்லாம் நிகழ்த்திக் கொண்டிருந்தார். இவ்விதம் மூன்று மணி நேரம் ராகத்தைப் பாடி விட்டு முத்துச்சாமி தீட்சிதரின் பாடலாகிய "ஸ்ரீ சுப்ரம்மண்யாய நமஸ்தே" என்ற பாடலை சாங்கோபாங்கமாகவும் அதிவிவரமாகவும் பாடிக்கொண்டிருந்தார். அது மட்டுமா! இல்லை. இன்னும் அதிவிவர மாக சுரவரிசைகளைக் கையாள ஆரம்பித்து விட்டார்.

தேசிகரும் தமது கொடிய நோயையும் மறந்து இசையின்பத் தில் லயித்துவிட்டார். வைத்தியநாதய்யருடைய இசையின் சக்தி தேசிகரது நோயின் வெம்மையை அவித்து மறைத்து விட்டது. இசை யின் தன்மை தேகத்தையே மறந்து விடும் படி செய்து விட்டபோது தேகத்தின் துன்பம் மாத்திரம் எவ்வாறு நினைவுக்கு வரும்! நமது உடம்பு ஓர் நரம்புப் பின்னல் சில உணர்ச்சிகள் மூளைக்குக கொண்டு செல்லப்படுகின்றன. மூளையிலிருந்து உத்தரவுகள் உணர்ச்சி மூலம் நரம்புகளின் வழியாக கொண்டு செலுத்தப்படுகின்றன. இதனால் நமது காரியங்களனைத்தும் ஒழுங்காக நடைபெறுகின்றன. ஆனால் இந்நரம்புகள் சரிவர இயங்காவிட்டால் உடல் நலம் பாதிக்கப்படு கிறது: நோய்வாய்ப்படுகிறோம்; வைத்தியர்களிடம மருந்து பெறு கிறோம்; இயங்காத உணர்ச்சிகள் சரிவர மருந்தினால் இயக்கப்படவே, எல்லாம் நிமிர்ச்சியை (normal) அடைவிக்கப்படுகிறது. மருந்து நரம்பைச் சரிவர இயக்குகிறது; பிறகு நரம்பின் மூலம் வரும் உணர்ச்சி ஒழுங்குபடுத்தப்படுகிறது. ஆனால் உணர்ச்சியை வசப்படுத்துவதெற் கென்றே அமைக்கப்பட்ட இசை இன்னும் எவ்வளவு சாதனைகளைப் பயக்காது! சரித்திர ஆதாரங்களையும் மனித அனுபவத்தையும் கவனித் தால் இசையால் ஆகாததும் உண்டோ! இறந்தவன் இசையால் உயிர் பெற்றெழுகிறான் (தியாகையாவின "நாஜீவாதார" என்ற பிலகரி ராகக்கிருதி இறந்தவனை உயிர்ப்பித்ததாகக் கூறப்படுகிறது.) கடும பட்சவாததததை இசை குணப்படுத்தியிருக்கிறது (மருந்துகளினால் குணமடையாத அகபர் சக்கரவர்த்தியின் மகள் "சயசயவந்தி" என்ற ராகத்தைக் கேட்டுப் பட்சவாதத்தினின்றும் விடுவிக்கப்பட்டுள்ள செய்தியை முகலாய சரித்திரம் கூறுகிறது.) நச்சரவுகள் இசை வயப் பட்டு தங்கள் கொடிய விடத்தையும் கக்கினவாம் (நந்தரூபர் என்ற

அசோக சக்கரவர்த்தியின் வைத்தியர், இசைபாடி, அரவுகளின் நச்சுப்பைகளைப் பெற்று, அதனின்று விட வைத்தியம் செய்ததாக "சுஸ்ருதசம்ஹிதை" கூறுகிறது.) இசையின் சொஸ்தப் படுத்தும் தன்மையைப் பற்றிப் பிரத்தியேகக் கட்டுரை வரும்.) தம்பியப்பன் என்ற மாணுக்கனின் கொடிய வயிற்று நோயை யதுகுலகாம்போதிராகத்தில் "திவாகரதனுஜம்" என்ற பாடலைப்பாடி முத்துச்சாமி தீட்சிதர் குணப்படுத்தியதுபோல், பெரிய வைத்திய நாதய்யரும் கா போதி பாடி குணப்படுத்தியுள்ளார்

தேசிகரும் மிக்க வியப்படைந்து இசைப் புலவரை நோக்கி, "தங்களுக்குப் பெரிய வைத்தியநாதய்யர் என்ற பெயர் ரொம்பவும் பொருத்தமானதே. எந்த வைத்தியத்திற்கும் குணப்படாத எனது வாதநோய், தங்களது இசையால் குணப்படுத்தப்பட்டது. தங்களது சங்கீதம் என்ற மருந்து எனது வாதநோயை நொடிப்பொழுதில் நீக்கி விட்டது. இப்பேற்பட்ட சிறந்த உபகாரத்தைத் தங்களைத்தவிர வேறு யாரால் செய்ய முடியும்?" என்று கூறிப்போற்றினுர். கிடைத்தற்கரிய பெரிய விலைமதிக்கத்தகாதபரிசில்களும் வித்துவானுக்குக்கிடைத்தது.

மற்றெரு சுவையுள்ள நிகழ்ச்சி. இடம். எட்டையபுரம் ஜமீன் மைனராக இருந்தபொழுது, ஆங்கிலேய அரசாங்கத்தின் பார்வையிலிருந்த சமயம். ஒரு பெரிய விருந்து. பல பிரமுகர்கள் கூடியுள்ள சந்தர்ப்பம், காலக்டர், ஸர்ஜன் முதலிய ஆங்கிலேய அதிகாரிகளும் குழுமியுள்ளனர். பெரிய வைத்தியநாதய்யரின் வினிகை நிகழ்ந்தது. மிகுந்த உணர்ச்சியோடும், ப்லமான அங்க சேட்டைகளோடும் பாடலானுர் வந்திருந்த ஸர்ஜன் வெள்ளைக்காரனுக சங்கீதம் விளங்கவில்லை. ஆனுல் அய்யரவர்களின அங்க சேட்டைகளைக் கண்டு அவருக்கு வலிப்பு வந்து விட்டது (Epilepsy) என்றே தீர்மானித்து விட்டான். ஏதாவது விபரீதம் நேர்ந்து விடுமோ என்று ஐயுற்று வினிகையை நிறுத்தி விடச்செய்தான் சப்தவேதியைக் (Stethoscope) கொண்டு பரீட்சை செய்தான் இரத்தக்கொதிப்பை அளந்தான் ஆனுல் எல்லாம் மிகவும் இயல்பாகவே (normal) இருந்ததைக் கண்டு வியப்படைந்தான். வித்துவானுக்கு உயர்ந்த சம்மானங்கள் அளிக்கப்பட்டபோதிலும் ஸர்ஜன் மனம் திருப்தியடையவில்லை

வெள்ளையர்களின் ஆட்சிக்காலமானபடியால் அவர்களின் அதிகாரிகளைத் திருப்தி செய்வது அவசியமல்லவா! மற்றெரு இளம் வித்துவானுன சீவைகுண்டம் சுப்பையர் எனபவரைப் பாடச்சொனனுர்கள். வித்துவானின் பருவமோ மிகவும இளமை சாரீரமும் நல்ல உழைப்பினுல வசப்பட்டு, நினைத்தபடி இயங்கவல்லதாயுமிருந்தது.

சீவகசிந்தாமணியில் கூறியிருப்பதுபோல் உடம்பு அசங்காமல், குரல் கெடாமல், கண்விழிகள் பிதுங்காமல், நரம்புகள் புடைக்காமல், சித்திரம் போலிருந்துபாடினர். குழுமியிருந்த அனைவரும் இசையின்பக் கடலில் மூழ்கினர். ஸர்ஜனும் மிகுந்த ஆச்சரியத்தையடைந்து, "இதுதான் பாட்டு; இவரல்லவா உண்மையாகப் பாடுபவர்!" என்று தனது மதிப்புரையைத் தெரிவித்தார்.

பொதுவாகச் சங்கீத வினிகை நிகழும் காலத்தில் வாய்ப்பாட்டு வித்துவானுக்குப் பிடிலும் தண்ணுமையென்ற மிருதங்கமும் பக்க வாத்தியமாக அமைத்துக்கொள்வது இயல்பு. இன்னும் அவ்விதமாகவே வினிகை நிகழ்வதைப்பார்க்கிறோம். ஒருசமயம் பெரிய வைத்தியநாதய்யர் மைசூருக்குச் சென்றிருந்தார். அரசரைக்காண இயலவில்லை. ஏனென்றால் இவருக்குக் கொஞ்சம் சித்தபேதம் ஏற்பட்டிருந்த படியால் இவரது வருகையை மற்ற வித்துவான்கள் அரசருக்கறிவிக்கவில்லை. அய்யரவர்கள் எவ்வளவு முயன்றும் பலிக்கவில்லை. என்ன செய்வார் பாவம்!

ஒரு நாள் அரசர் பவனி வந்தார். தெருவிலுள்ள ஒரு சிறிய கோயிலுக்கு சமீபமாகக் கூட்டம் வந்தது. உடனே இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன் படுத்திக் கொண்ட அய்யரவர்கள் கோயில் பூசாரி கையிலிருந்த உடுக்கையைப் பிடுங்கி தாமே வாசித்துக் கொண்டு பாடலானர். இதைச்செவி மடுத்த அரசரும் இசைவயப்பட்டுக்களிப்படைந்து பாடுபவர் யாரென்பதை அறிந்தார். உடனே அரண்மனைக்கு அழைத்துச் சென்று பாடச்சொல்லிக் கேட்டு மகிழ்ந்து அளவற்ற சன்மானங்களையும் வழங்கினர்.

நல்ல சாரீரமும சங்கீதச் சிறப்பும் உள்ளவர். உள்ளத்தை கவர்ந்து மெய்ம்மறக்கச் செய்யும் ராகங்களைப் பாடுவதில் இணையற்றவர். பெரியோர்கள் இயற்றியுள்ள நல்ல அம்சங்கள் பொருந்திய கீர்த்தனங்கள் பல இவருக்குத்தெரியும். சிந்து, தெம்மாங்கு (தேன் பாங்கு) முதலிய உருப்படிகள் அதிகமாகத் தெரியும். இவரைப்போல அவற்றை மற்றவர்கள் அவ்வளவு அழகாகப் பாட முடியாதாம் பல்லவி பாடுவதிலும் இவர் சமர்த்தர். (ஜதிபேத முறைகளிலும் ராக வின்னியாசத்திலும் நல்ல கல்பனையுண்டு என்பதைக் காட்டுதல்.) சிறந்த முறையில் திறமையுடன் தெம்மாங்கு பாடிவந்தபடியால் இவருக்குத் தெம்மாங்கு வைத்தியநாதய்யர் என்ற சிறப்புப் பெயருமிருந்து வந்தது.

# வில் யாழ்

பத்துப்பாட்டு என்பது சங்க நூற்களில் ஒன்றாகும்: அதில் பெரும்பாணாற்றுப்படை என்பதும் ஒன்று. இது கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற பெரும் புலவரால் பாடப்பெற்றது. காஞ்சிநகரில் அரசு புரிந்த சோழன் இளந்திரையனையும் அவன் வள்ளன்மையினையும் பற்றியபாடல் இது. ஒரு பெரும்பாணன் அரசவை சென்று பரிசில் பெற எண்ணிய மற்றொரு பெரும்பாணனைக் குறித்துப் புத்திமதி கூறியதாக அமையப்பெற்ற பாடல். காஞ்சிக்குச் செல்லும்வழி, அந்நகர மாண்பு, நாகரீகம், மக்களின் ஊண், தொழில், ஒப்புரவு முதலியவற்றை விரித்துக் கூறுகின்றது. இதில் பேரியாழைக் கைவழியாகக் கொண்டு செல்லும் பெரும்பாணன், வழியில் இடையர் கையிலுள்ள வில்யாழினைக் கண்டு அதன் இலக்கணம் வகுக்கிறார். இவ்விடையர்கள் ஆநிரைகாத்துக்கொண்டு தம் கைவழியாகிய வில்யாழை வாசித்து வந்துள்ளனர் உள்ளே துளையுடைய குமிழமரக்கொம்புகளை வில்லாக வளைத்து, தற்காலம் மருள் என்று கூறப்படுகிற கற்றாளை நாரினாலே திரித்த கயிற்றை நரம்பாகக் கட்டி, அதைத்தெறித்து இசையொப்புமையினையாராய்ந்து மகிழ்வடைகிறான் இவ்வாறு இசை கூட்டப்பெற்ற வில்யாழில் குறிஞ்சிப் பண்ணையெழுப்பித்து இடைச்சியினையும் மகிழ்விக்கிறான் இவ்வில்யாழிற்குக் குமிழங்கொம்பு கோடாகிறது. கோடு என்பதைப் பழந்தமிழர்கள் மருப்பு என்று வழங்கிவந்துள்ளனர்; தற்காலம் அதைத்தண்டி என்று கூறுகிறோம். இவ்வில் யாழிற்குக் கோடு ஒன்றுதான்; நரம்பும் ஒன்றேதான். இதில் இடையன் குறிஞ்சிப்பண்ணை வாசித்தான் என்று உருத்திரங்கண்ணனார் கூறுவதிலிருந்து, குறிஞ்சிப் பண்ணிற்குரிய ஏழு கேள்விகளையும், வில் யாழிலுள்ள ஒரே நரம்பில் இசைத்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

கோழிக்கோட்டிற்கு பக்கத்திலுள்ள வள்ளுவ நாட்டுத் தாலூக்காவின் பெருந்தல் மன்னா என்ற சிற்றூருக்கருகிலுள்ள காட்டில் வாழும் புள்ளுவர் என்ற மலைவாழினத்தார், மரல் கயிற்றைப் பண்மொழி நரம்பாகக் கொண்ட வில்யாழினைக் கையிற்கொண்டு, பிளாச்சு அல்லது சில் ஒன்றால் நாணைத்தெறித்து இசையெழுப்புகிறார்கள் வில் யாழை இசைத்துக் கொண்டே மிடற்றாலும் பாடுகிறார்கள். இதை வில் பாட்டு (வில்லுப்பாட்டு) என்று வழங்குகிறார்கள். இவர்கள் பாடும் பாட்டில் முக்கால் பாகம் தமிழ்ச் சொற்கள், யாழிற்குப்பிறகு வில் யாழ் தோன்றியிருக்க வேண்டுமென்பது ஆராய்ச்சியாளர்களின் முடிபு.

மிகவும் சிறிய இசைக்கருவியாயமைந்துளதால் வில் யாழினிசை மெல்லென்ற முரற்சியாய் அண்மையிலுள்ளோருக்கு மட்டும் புலப்படுவதாகும். இங்கு யாழினுறுப்புக்களைக் குறிக்கும் சில கலைச் சொற்களைக் குறிப்பிட்டபிறகு வில் யாழை விளக்குவது பொருந்தும்.

| தமிழ்ப்பெயர் | ... | தற்காலப்பெயர் |
|---|---|---|
| 1. பத்தல் | ... ... | குடம் |
| 2. போர்வைபர்சை | ... | மேற்பலகை |
| 3 யாப்பு | ... ... | டகாரி |
| 4. வறுவாய் | ... ... | கண் |
| 5. நுண்துளையாணி | ... | மேற்பலகைத்துளைகளும் அவற்றில் பொருத்தப்படும் மர ஆணிகள் |
| 6. கவைகடை | ... | நாகபாசம் |
| 7 உந்தி | ... ... | குதிரை |
| 8 ஒற்றுறுப்பு | ... ... | தாளரேக்கு |
| 9 ஆணி | ... ... | பிற்டை (பிருடை) |
| 10. வணர் | ... ... | தண்டின் வளைந்த பாகம் |
| 11. மாடகம் | ... ... | பிற்டைகள் உள்ள மாடம் போன்ற இடம் |
| 12. பண்மொழி நரம்பு | ... | இசையெழுப்பப்படும் தந்திகள் |
| 13. கோடு | ... ... | மருப்பு ... தண்டு |
| 14 திவவு | ... ... | வார்க்கட்டு |
| 15. புரிநரம்புக்கோல் | ... | வெண்கலமெட்டு |
| 16. தந்திரிகரம் | ... | காடிச்சக்கை |
| 17 தகைப்பு | ... ... | பண்மொழி நரம்புகளை மாடகத்தில் தாங்கும் உலோக ரேக் |
| 18. ஐம்பத்தோருறுப்பு | ... | 51 இசையொலிகள் |

N B. மாடகத்தைப் பாலிகை என்றும் கூறுவர்.

பெரும் பாணாற்றுப்படையில்

"செந்தீத்தொட்டகருந்துளைக் குழலின்
இன்றீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில் யாழ் இசைக்கும் விரலெறிகுறிஞ்சிப்
பல் காற்பறவை கிளை செத்தோர்க்கும்
புல்லார் வியன் புலம் போகி"

எனப்புலவர் கூறுகின்றார். குமிழங் கொம்பு வில் யாழில் பத்தராகவும் (குடத்திற்கிணையாகவும) கோடாகவும் (தண்டியாகவும்) அமைகின்றது. ஆகையினால் ஒலி பல்குதற்கு (resonate) இடமில்லாமற்போய் விட்டது. குமிழமரத்தினை அறுத்து, இலக்கணப்படி உருவாக்கி, உள்ளே குடைந்து வறுவாயாக்கி (கண்ணாக்கி) அதைத் தோலினால் மூடிப்பத்தரினை (குடத்தினை) அமைத்து ஒலி பல்கச் செய்வது அக்கால மரபு. நரம்பு தளரின். ஒலி மந்தமாகும்; இறுகக் கட்டப்படின், ஒலி வலிவதாகும் (உச்ச சுரமாகும்.) இதன் பின்னர் வில் யாழ் அமைத்துக்கொள்ளும் இலக்கணம் விளக்கப்படுகிறது தேவையான அளவு நீளமுள்ள குமிழங் கொம்புகளை சணற்கயிற்றால் கட்டி, கொடும்பற்ற மால் கயிற்றைப் பண்மொழி நரடுபாக்ச் செய்து கொள்ள வேண்டும். குமிழங் கொம்பின் துளைகளில் நரம்பினைச் செலுத்தி நன்றாகக்கட்டிக் கொள்ள வேண்டும் பிறகு முடுக்காணிகளைச் சீவி, அவற்றில் நரம்பினைச் சுற்றி தேவையளவு இறுக்கிக் கொள்ள வேண்டும். நரம்புக்குக் கீழ் நெல்லளவு இடைவெளி விட்டு ஒற்றுறுப்பினை அமைத்துக் கொள்ள வேண்டும். நரம்புகளை உழை முதல் (மமுதல்) கைக்கிளையிறுவாக (க முடிய) இசை கூட்ட வேண்டும். [தொடர்ச்சி அடுத்தபக்கம்]




திருமணம் 3-5-1968

மணமகன்: சிரஞ்சீவி:
S. K. துரைஸ்வாமி
இஞ்சினியர் ஜி. வி. டி.
பெங்களூர்

மணமகள்: சௌபாக்யவதி:
சந்திரா ஆகியோர்க்கு
எமது மனமுவந்த
வாழ்த்துக்கள்.

இப்படிக்கு

மதராஸ் ஸில்க் ஸ்டோர்ஸ்
ராமர் கோவில் வீதி, ராம்நகர்,
கோயமுத்தூர் -9.

வர்ஷலியா
திவான்பகதூர் ரோடு,
R. S புரம்,
கோயமுத்தூர் 2.

யாழிசையை அளகுங்கோலைக் குழலிசையென்று நம் முன்னோர்கள் கருதிவந்திருக்கின்றனர் தற்கால வழக்கில் இதை ஒலியளப்பான் (Sonometer) என்கிறோம். உழைக்குக்கிளையாகக் குரலையும் உழைக்கு நட்பாசத்தாரத்தையும் இசைக்கூட்ட வேண்டும். உழைக்குரல் ஐந்தாம் நரம்பு: எனவே கிளை அல்லது ஷட்ஜபஞ்சம சம்வாதித்வம், உழை-தாரம் நான்காம் நரம்பு; எனவே நட்பு அல்லது ஷட்ஜ மத்ய ம சம்வாதித்வம் என்று அழைக்கலாயினர். குரலுக்குக்கிளையாக இளி நரம்பிற்கு இசை கூட்ட வேண்டும் இளி இரண்டாம்நரம்பு, மெலிவுத் தானத்திலே நின்றபடியால், குரலுக்குக் கிளையாகிய சமன் தானத்து இளி அதன் செம்பாலாகும் (நரம்பை இருசமகூருக்கினல் அது செம்பால் என்றும், சம கூருக்குவதற்கு முன் அதில் ஷட்ஜம் பேசும்; சம கூருக்கிச் செம்பரவில் தாரஷட்ஜம் பேசும்.) இளிக்குக் கிளையாகத்துத்தத்தையும் துத்தத்துக்குக் கிளையாக விளரியையும் இசைக்க வேண்டும். விளரி மெலிவுத்தானத்திலுள்ளது. விளரிக்குக் கிளையாக ஏழாங்நரம் பாகியகைக் கிளையை இசை கூட்டவேண்டும் எனவே ஏழு நரம்புகள் தமக்கும் தமது செம்பாலுக்கும் பதினன்கு இசை நரம்புக்ள் வில் யாழிலே பெறப்படுகின்றன. மெலிவு நான்கு சமன் ஏழு, வலிவு மூன்று என்று கொள்ளப்படும். இவை பாலைக்கலியினுள் விளக்கம் பெற்றுள்ளன.

முதனரம்பிலிருந்து ஏழாம் நரம்புவரை இயக்க வேண்டும்; பிறகு ஈற்றிலே முதனரம்பின் செம்பாலினையியக்கினல் உழைகுரலாய அரும்பாலைவரும் இதைத் தகற்காலம் கரகரப்பிரியாராகம் என்று சொல்லுகிறோம். உழையில் குரல்தோன்றக்குறிஞ்சியாழ. அலகுக் குறியீட்டால் இதை 'நிசரிகமபதநி, என்று எழுதுகிறோம். இளி முதல் இளியீருக. இரண்டாவது முதல் ஏழாவது நரம்பி வரையியக்கி முதலிரண்டு நரம்புகளின் செம்பாலையும் இயக்கினல் கோடிப்பாலை வரும். இதை இப்பொழுது சங்கராபாணமென்றும் 'சரி சம பதநி, என்ற கேள்விக்குறியீட்டாலும் குறிக்கிறோம் விளரிமுதல் விளரியீருக. மூன்று முதல் ஏழுவரையியக்கி முதல் மூன்று நரம்புகளின் செம்பாலினையுமியக்கி விளரிப்பாலையாகின்றது. இதில் சுத்த-பிரதி மத்தியமங்களிரண்டுவருவதால் இவ்விராகம் வழக்கிலில்லை. இதை 'ரிகமபதநிசரி' என்று குறிக்கிறோம். தாரம் முதல்தாரம் ஈருக நான்கு முதல் ஏழுவரையியக்கி, முதல் நான்கு நரபுகளின் செம்பாலினையுமியக்கினல் கமபதநிசரிக என்று குறிக்கப்படும். மேற் செம்பாலை என்கிற (தற்கால) நடைபரவிவரும் குரல் முதல் குரல் ஈருக. ஏழு என நின்ற நரம்புகளையியக்கி, முதலைந்து நரம்புகளின் செம்பாலினையுமியக்கிச்செம்பாலையைப் பெறுகிறோம். 'மபதநிசரிகம' என்று குறிக்கிறோம்;

தற்காலப்பெயர் அரிகாம் போதியாகும். துத்தம் முதல் துத்தம் ஈறுக ஆறும் ஏழாம் நரம்புகளையியக்கி முதலாறு நரம்புகளின் செம்பாலையை யியக்கப்பெறுவது 'பதநிசரிகமப' என்று குறிக்கப்படுகிற (தற்காலம், கல்யாணி என்றழைக்கப்படுகிற படுமலைப்பாலைவரும். கைக்கிளை முதல் கைக்கிளை ஈறுக, ஏழாம் நரம்பினை இயக்கியபின், ஏழுநரம்புகளின் செம்பாலையையும் இயக்கினால் (தற்காலம்) தோடி எனப்படும் செவ்வழிப் பாலைவரும்; 'தநிசரிகமபத' என்று குறிக்கிறோம். (இவையனைத்தும் இக்கட்டுரையில் மேற்கோளாகக்கொண்ட பெரும்பாணாற்றுப்படையடி களின் விளக்கமாகும்.

இடையனமைத்துக் கொண்ட வில் யாழ் குறிஞ்சிப்பண்வாசிக் கத்தகுதியுள்ளதாயிருந்தது. ஆனால் ''மரையாமரலகவரமாரிவறப்ப'' (பாலைககலி 5-பாடல்), ''மரலசாயமலை வெப்பமந்தியுரங்க'' (பாலைக கலி 12-ம் பாடல்), என்ற அடிகளிலிருந்து இதுபாலை நிலத்திற்குமுரி யது என்று விளங்குகிறது. ஏனெனில் மருள்பாலை நிலத்திலும் வளர் கின்றது எட்டாம் பரிபாடலிலே ''ஏழ்புழை, ஐம்புழை' எனவருவதி லிருந்து, முறையே ஏழு, ஐந்து துளைகளையுடைய குழற்கருவி குறிககப் படுகிறது. ஐந்து நரம்பினையுடைய வில்யாழே முதற்கண் தோன்றி யிருககலாமென்று யாழ்ப்பாணம் விபுலானந்த அடிகள் அபிப்பிராயப் படுகின்றார். இதிலிருந்து ஐந்து சுரங்களையுடைய ராகங்கள் அக்காலத் தில் அதிகமாகக கையாளப்பட்டதாகத் தெரிகிறது ஏற்கனவேயே முந்திய மலர்களில் கூறியுள்ளபடி மோகனம் என்ற ஐந்து சுரங்களை யுடைய ராகத்தைக் கொண்டே பைதகோரசு என்ற யவன மேதை யுலிசிசு என்ற அரசனின ஏததநாள வெடிப்பைக்குணப்படுத்திய விவ ரம் யவன சரித்திரததில் உளளது. எனவே குறிஞ்சி, பாலை முதலிய நிலஙகளிலுள்ளவர்கள் இவ்விலயாழிலைக கையாண்டிருக்கக் கூடும். சங்கநூல்களில் வில்யாழ் பாணர்கள் கையிலில்லை ஆனால் காட்டிடத் தேயுறையும் ஆநிரைகாககும் இடையர்கையில இருந்ததாகக் கூறப் படுகிறது அவர்கள் பொழுதுபோக்கிற்கோ, தற்காப்பிற்கோ, அல்லது ஆநிரை காககவோ, அமைததுக் கொண்டிருக்கலாம் என்று ஊகிக்க இடமிருக்கிறது.

வில் யாழினமைப்பையும் அது குயிலப்பட்ட முறையையும் கூர்ந்து நோக்கினால் இது தற்கால வினிகைகளில் பிரபலமாய் விளங்குகின்ற பிடிலின் முன்னோடி (Forerunner) என்று கருத இட முண்டு. நமது நாட்டிலிருந்து இது அயல் நாடுகளுக்குச் சென்று காலததின் கோலத்திலும் கலாசார வளர்ச்சியினாலும் மாறிப் பிடில் என்ற உருவத்தில் திரும்பி வந்துள்ளது என்று கூறுவது மிகையாகாது.

# சிலப்பதிகார இசைக்கூறுகள் :- ஆடல் பாடல்

அரங்கேற்று காதையில் நுழைந்து, சோணாட்டின் தலைநகரான பூம்புகாருக்குச் செல்வோம். கொழுங்குடிச் செல்வர்க்குத் தோன்றிய கோவலனும் கண்ணகியும், திருமணமான பிறகு, எழு நிலை மாடத்தின் நிலா முற்றத்திலே, இருவரும் தீராக்காதலில் மயங்கி, வியத்தகு சிறப்புடன் இல்லறம் நடத்துகின்றனர். அந்நகரத்து நாடகக் கணிகையான மாதவி (சித்திராபதியின் மகள்) ஆடலும் பாடலும் வல்லளாய்த் தன் கல்வித் திறத்தைத் கரிகாற் பெருவளத்தான் முன் அரங்கேறித் தலைவரிசை பெறுகிறாள். கோவலன் அவளுக்குப் பரியமளித்து அவள் பான்மையனாகித் தன் மனை – மனைவியை மறந்து மாதவியை விட்டு நீங்கா விருப்புடையனாகிறான். இக்கதையில் இசை நாடகங்களின் சிறப்பியல்புகள் ஆடல் பாடல் வாயிலாக விரித்துக் கூறப்பட்டுள்ளன. மாதவியின் அபிநயத்தை விளக்கும் வாயிலாக ஆடல் பாடல்களின் இயல்புகளை விரிவாகக் கூறுகிறார் இளங்கோ அடிகள். மாதவி ஆடலும் பாடலும் அறிவு மிகு கல்வியும் பயின்றவள். ஆடல், பாடல் அழகு என்ற இவற்றுள் சிறிதும் குறையில்லாதவள். ''நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து'' என, நம மனம்மகிழ நாடகப் புலமையைக்காட்டுகின்றாள். மாதவியின் திறத்தை அடிகளே ''ஆடலும் பாடலும் அழகும் என்றிக் கூறிய மூன்றின் ஒன்று குறைபாடமல்'' என்று வெகு அழகாகப் போற்றுகின்றார். அக்கால ஆடல் பாடல் நயங்களைத் திறம்பட விளக்குகின்றார்.

ஆடல் பாடல் மக்களுக்கு இன்பமூட்டும் சிறந்த கலைகள். ஆடலும் பாடலும் தமிழ் மக்கள் சரித்திரத்தில் தலைமையடைந்து வந்திருக்கின்றன. காவிரிப் பூம்பட்டினத்தில் வதிந்த அக்காலத் தமிழ் மக்கள் ஆடல் பாடல் போன்ற அறுபத்துநான்கு கலைகளிலும் வல்லவர்களாயிருந்து வந்திருக்கின்றனர். 'பாடலோர்த்தும் நாடகம் நயந்தும்,, என்று பட்டினப்பாலையில் வரும் அடி காவிரிப் பூம்பட்டின மக்கள் ஆடலாலும் பாடலாலும் இன்புற்றிருந்தனர் என்பதைத் தெரிவிக்கின்றது. ஆடலும் பாடலும் ஒன்றுக்கொன்று இணைகொண்டவை என்று திரிகடுகம் கூறுகின்றது. ''விளியாதான் கூத்தாட்டுக் காண்டலும்'' என்பது இதனை வலியுறுத்துகிறது. பாடல் இருவகை; ஆடலுமிருவகை. ஆடல் பாடல் இசையே தமிழிசை என்று அடிகள் விளக்குகிறார்

புலவர்கள் ஆடல் பாடல்களைக் கேட்டு மகிழ்வுற்றனர் இயற்கையழகிலேயே ஆடல் பாடலின்பத்தை உணர்ந்தனர். ஆடல பாடல் காட்சிகளை வருணித்தனர். வண்டுகள் மலை மூங்கில்களைத் துளைத்திருக்கின்றன. இத்துளைகள் வழியாகச் செல்லும் காற்று இனிய ஓசையை எழுப்புகின்றது. வண்டுகள் யாழ்போல் ரீங்காரம் செய்கின்றன. எனவே இவையெல்லாம் இன்னிசையாகின்றது. மயில் மெல்ல நடந்து களிநடம் புரிகின்றது. இவ்விதம் நிகழும் ஆடல் பாடல்களைக்கண்டு களிக்க மந்திகள் சபை கூடியிருக்கின்றன. இப்பேற்பட்ட ஆடல பாடல் காட்சியைக் கபிலர் அகநானூற்றில் வருணிக்கிறார். சாத்தனாரும் மணிமேகலையில் இத்தகைய தொரு காட்சியை விளக்குகிறார். தும்பி குழலிசை காட்ட, வண்டு நல்யாழையொத்த ஒலி எழுப்ப, குயில் பாட, மயில் ஆட இக் காட்சி தான் மணிமேகலையில் சாத்தனரால் அளிக்கப்பெற்றிருக்கிறது

ஆடல்பாடல் நலங்களைச் சிலப்பதிகாரம் இனிதியம்புகின்றது. ஆடல் நாடகத்துக்கும் பாடல் இசைக்கும் உரியவை. வேத்தியல், பொதுவியல், அகம், புறம், கூத்து என ஆடல் பலதரப்பட்டதாகும். இவற்றுடன் வேந்து விலக்கு, படைவிலக்கு, ஊர்விலக்கு எனப்பாட்டு வகையுண்டு. இவற்றிற்கு உறுப்பாகக் கூத்து நிகழ்வதுமுண்டு. பாடலுக்கேற்ற ஆடல, ஆடலுக்கேற்ற பாடல் என்ற நெறிகளெல்லாம் நன்கு உணர்த்தப்படுகின்றன. ஆடல் பாடல்களுக்குள்ள திறங்களை இசையாசிரியன் நன்கு உணர்ந்திருக்க வேண்டுமென்று இளங்கோ அடிகள பணிக்கிறார். ஆடலாசிரியன், இசையாசிரியன், தண்ணுமை, குழல் யாழ் முதலியவாசிரியர்கள அமைதிகளைக் கூறும் வாயிலாக ஆடல் பாடல் வகைகளை ஆசிரியர் விளக்குகிறார். ஆடல் மகளிர் அரங்கேற்றமும் இசைக்கருவிகள் குயின்றிசைத்த பாடலும், அதற்கிசைந்த ஆசிரியர்களின் அமைதிகளும் அறுதியிடப்பட்டுள்ளன.

பண்டைத்தமிழ் மக்களின இசை நாடகக்குறிப்புகளை விரியவுணர்வதற்கு இயலாதவாறு இசை நாடக நூல்கள் மாய்ந்தொழிந்து விட்டன, எனவே பழங்கால ஆடல் பாடல்களின இலக்கண விலக்கியங்களை ஒருவாறு நன்குய் உணர்வதற்குச சிலப்பதிகாரமே பயனபடுகிறது. இதில் அரங்கேற்றுகாதை வேனிற்காதை முதலியவற்றுள் ஆடல் பாடற்குறிப்புகள் செறிந்திருக்கின்றன, மங்கல வாழ்த்துப்பாடல், கானல்வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர், குரவை ஊர்சூழ்வரி, குன்றககுரவை முதலிய பகுதிகள் ஆடல் படல்கள விரவி வரும் பகுதிகளாகும். துன்ப மாலையும் வஞ்சின மாலையும் சோகச்சுவை மிகுந்து நிற்பதாகும்

பொதுவாக அக்காலத் தமிழ் மக்களெல்லோரும் ஆடல் பாடலில் ஈடுபட்டு நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர் என்று தெரிகிறது. மடவார்களாற் செவ்வேள் என்று சிறப்பிக்கப்பட்டுள்ள கோவலன் ஆடல், பாடல், யாழ் ஆகியவற்றிற்றிலேத்திருந்தனன். மாதவி என்னும் கணிக்கையர் குல விளக்கோ, ஐயாண்டில் தண்டியம் பிடித்து ஏழாண்டு ஐயந்திரிபறப்பயின்று, பன்னீராண்டெய்திய பின, அரசரரங்கிற் புகுந்து ஆடிப்பாடிப் பரியம் பெற்றனள் பெருங் குடி மரபிற்றோனறியவர்கள் தொட்டு கணிகையார் குலத்தினளாகிய மாதவியீருகவுள்ள மாந்தரனேவரும் ஆடல் பாடலிலீடு பட்டிருந்தனா எனபதை அரங்கேற்று காதை இயம்புகிறது. ஆய்ச்சியர். குரவர் முதலிய அனேவரும இசை நாடகக்கலேகளில பயிற்சியுள்ளவர்களாயிருந்திருக்கின்றனர். செனற இதழில இசைவல்லுநர்க்குப் பிரத்தியேக விடுதிகளமைக்கப்பட்டிருந்தன. கவிரிப்பூம் பட்டினத்தில் எனறு விளககிஞம். குழற்பாணர்களுக்குத் தனி விடுதி, யாழ்ப்பாணர்களுக்குத் தனி உறைவிடம, இவர்கட்கெல்லாம் மருவூர்பபாககத்தில் விடுதிகள். இதிலிருந்து மருவூர்ப்பாக்கத்தில் வதிந்தார்கள் இசையில் நல்ல முதிர்ந்த அனுபவம வாய்ந்திருநதனா் என று சிலபபதிகாரம் கூறுகிறது. ஆடல பாடல்களில் தேர்ச்சி பெற்ற கூததர்களும் கணிகையர்களும் பட்டினபபாக்கத்திலிருநததாகத் தெரிகிறது. இவ்விரணடுககும் இடைப்பட்ட நாளஙகாடியில குரவையாடுபவர்கள் வதிநது வந்தனர். இவற்றையெல்லாம கூர்ந்து கவனிததால ஆடல பாடல்களில ஈடுபட்டவர்களேத் திறனுய்ந்து அவரவர்கட்கேற்ற விடுதிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன வெனபது புலனுகிறது. மேலும குயிலுவக்கருவியருக்கெனததனி விடுதிகளுமுணடு.

ஒரு நாட்டின் நாகரிக வாழ்விற்கு ஆடல் பாடல் முதலிய கலேகள் இன்றியமையாதவை. இககலேகளேக கடவுள் வழிபாட்டுடனிணேத்துப் புனிதமாக்கியுள்ளனர். மனக்கிளர்ச்சி, புலனுணர்வு. பேரினபப் பயன் முதலியவற்றை நலகவே இக்கலேகளே ஆன்ருேர்கள் வகுத்துள்ளனர். அன்ஞரியற்றிய இலககணம் வழி வழியாக வந்து நமககு உற்ற பயனளித்து வருகினறது இவையாவும் நம் சிலப்பதிகாரகாலததில் தனித்தமிழிசை வழக்கத்திலிருந்து எனறு தெரிகிறது. இசைத் துறையில். ஆடல பாடலிலீடுபட்ட அக்காலத்திய மக்கள வாச்சியங்களுடனிசைந்த பாடலே இனிமையாகப் பற்றுவழிசேர்த்து ஓசையிலக் கணம் குற்றமறத்தெரிநத அறிவாளிகள்.

அக்கால அரசர்களும் இசைக்கலேயிலும நாடகக்கலேயிலும் முதிர்ந்த அறிவுடையவர்களாதலால், ஆடல் பாடல் மகளிரைத் தம் நாளோலக்கத்தில் இருக்கச் செய்து பரிசில்கள வழங்கி

சிறப்பித்திருக்கின்றனர். புரவலர்களைக் காணச் செல்லும் பாணன் பாடினி ஆகியோர் ஆடியும் பாடியும் அசைந்தும் சென்றனர் என்பது சங்கநூற்செய்தி. ஆடவரும் பெண்டிரும் கை கலந்து ஆடிப் பாடி களித்து வந்திருக்கின்றனர். காரிகையார் பண்பாடச் சேயிழையார் நடம்பயிலும் திருவையாறு என்று ஞானசம்மந்தப் பெருமாள் பாடிப்போந்தார் எனவே ஆண்டவனை வணங்கு மடியார் குழாமும் ஆடல் பாடலை விட்டாரில்லை. சரித்திரத்தைக் கவனித்தால், கல் தோன்றி மண் தோன்ருக் காலம் முதல் மக்கள் ஆடல் பாடலிலீடுபட்டுவந்தனர் என்பது அங்கைநெல்லியாகப்புலனுகின்றது. மாங்குடி மருதனுரும் பெருங்கவுசிகனுரும் "யாழ்வாசித்தாற்போலப்பாடும் நயப்பாடு தோன்றும் பாட்டினையுடையவிறல்பட ஆடுதலையுடையார்" விறலியர் என்று போற்றியுள்ளனர். கூத்தன், கூத்தி, ஆடுகளமகன், ஆடுகளமகள் என்ற இவர்கள் சங்ககாலத்தில் ஆடல் பாடல்களை வளர்த்த கலைவாணர்களாவர் விழாக் காலங்களில் ஆடிப் பாடிக்களித்தலும் பிற காலங்கள் வள்ளியோர் பாற்சென்று ஆடிப்பாடிப் பரிசில் பெறுவது இவர்கள் மரபு. இவர்களது கலையையுணர்த்தும் நூலே கூத்தநூலாகும்

அரங்கேற்று காதையில் சிறப்பிக்கப்பட்டுள்ள ஆடல் பாடலுக்கு ஒப்பக்கம்நாட்டாழ்வாரும் ஓர் சிறந்த கருத்தினை அளித்துள்ளார்கள்.

"நெய்திரள் நரப்பில் தந்த மழலையின் இயன்ற பாடல்
தைவரும் மகரவீணை தண்ணுமை தழுவித் தூங்கக்
கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல
ஐயநுண் இடையார் ஆடும் நாடக அரங்கு கண்டார்."

சாக்கையனென்பான் சேரன் செங்குட்டுவனுக்குக் கொட்டிச்சேதம் என்னும் கூத்தை ஆடினனென்று சிலப்பதிகாரம் கூறுகிறது. பிற்பட்ட காலத்திலும் சாக்கையர் இருந்து வந்திருக்கின்றனரென்று பல கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. இதே போல் பிற்காலத்தில் பல்லவமன்னர்களின் தலைநகரான கச்சிப்பதியைச் "சீராலே பாடல் ஆடல் சிதைவில்லதோர் ஏரார் பூங்கச்சி" என்று சிலபதிகங்கள் கூறுகின்றன.

குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் முதலிய நிலங்கட்குரிய ஆடல் பாடல்களும் இருந்து வந்திருக்கின்றன. குறிஞ்சி நிலப் பெண்கள் ஆடிப்பாடி முருகப்பெருமானை வழிபட்டு வந்துள்ளனர். இதையே முல்லை நில மகளிர் ஆடும்பொழுது ஆய்ச்சியர் குரவை என்று அழைக்கப்பட்டுள்ளது. குரவையாடுதல் இருபாலர்க்குமுரியது ராஜராஜசோழன், குலோத்துங்க சோழன் முதலிய மன்னர்கள்

ஆடல் பாடல் நிகழ்ச்சிகளேயும் பிறவற்றையும் கோயில்களை எடுப்பித்து அவற்றின் கோபுரங்களில் சிற்பங்களாகச் சமைத்துள்ள படியால் அவைகள் அழியாமல் என்றும் எல்லோர்க்கும் சிறந்த இசை நாடகக் கருவூலமாய்த்திகழ்கின்றன.

இனி வரும் கட்டுரைகளில் சிலப்பதிகார ஆடல், பாடல், கூத்து, வரி முதலியவை தெளிவாக விவரிக்கப்படும், அவண் கையாளப்பட்டுள்ள கலைச்சொற்களும் தற்கால வழக்கிற்கிணங்க தெளிவு படுத்தப்படும். (தொடரும்)


தந்தி "அம்ருதம்" போன்: 26006

P. O. NO. 1382

# தி ஆர்ய வைத்திய பார்மஸி (கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 366. திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

(உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்)

கோயமுத்தூர் கிளை:

ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில் கோயமுத்தூர்-18

மற்ற கிளைகள்:

புது டில்லி-5, மதராஸ்-14, கள்ளிக்கோட்டை-1, கள்ளிக்கோட்டை-2, திருச்சூர்-1, ஏர்ணுகுளம், கொச்சின்-16, பாலக்காடு, பொன்னனி, கண்ணனூர், ஆலத்தூர், கஞ்சிக்கோடு.

பாக்டரி:

கஞ்சிக்கோடு (போன்: 2)

கேரளா.

நர்ஸிங்ஹோம்:

ராமநாதபுரம்

திருச்சி ரோடு, கோவை-18.

(போன்: 22194)

ஆர்யவைத்தியன்:

P. V, ராமவாரியர்

பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

# ஒலியின் நவீன சாதனை.

வைத்திய நிபுணர்களாலும் மருத்துவ வல்லுநர்களாலும் தீர்க்கமுடியாத கொடிய நோய்களை இனிய ஒலி குணப்படுத்துகின்றது வைத்தியர்கள் நோயை நிர்ணயம் (Diagnosis) சரியாகச செய்யாவிட்டால் நோய் குணமடையாது நோய்க்கேற்ற மருந்து கொடுக்கவில்லையென்ருலும் நோய் குணமாகாது. மருந்துச் சேர்க்கையும் சரிவர இல்லையென்ருலும் நோய் குணமடையாது. நோயாளிகள் கொடுக்கப்பட்ட மருந்தை முறையோடு உபயோகிக்காவிட்டாலும் நோய் தீராது. இவ்வளவும் சரிவரக்கொண்டு செலுத்தப்பட்டால்தான் நோய் தீரும் இன்னிசையோ, தேவையான உணர்ச்சிகளை ஏற்படுததி நோயாளிகளை நோயின் கடுமையை மறக்கச் செய்து, நொடிப்பொழுதில் நோயைத்தீர்த்து விடுகிறது எது எப்படியிருந்தாலும் முறையற்ற ரோக நிர்ணயமும் நேர்மையற்ற மருந்தும், என்ன விபரீதங்களை விளைவிக்கக் கூடுமோ. அவற்றை இசை செய்து: நோயை குணப்படுத்தும்; இல்லையேல் விபரீத விளைவுகளை உண்டு பண்ணுது; ஏனெனில் நம் செவிக்கினிய இசையானுல் கேட்போம்; மாறுபட்டிருந்தால் கேட்கப்பிரியப்படமாட்டோம். அவ்வளவு தானே!

பிரஷ்ய நாட்டரசராகிய பிரடரிக் என்பவன் பிரதி தினமும் நான்கு மணி நேரம் இசைக்காகச் செலவிட்டாளும் ஸ்கோபஞர் என்ற ஜெர்மனிய அறிவாளி இசை நமது சரீரத்திலும் ஆத்மாவிலுமுள்ள கழிவும் பொருள்களை impurities) நீக்குகின்றதாம். எப்பொழுதும் மனநோய்வாய்ப்பட்டிருந்த பிலிப்ஸ் என்ற ஸ்பானிய அரசனுக்கு பாரினல்லி என்ற இசை வல்லுநருடைய இன்னிசை பூரண குணமளித்தபடியால் இவ்விசையோனுக்கு மன்னன் ஆண்டு தோறும் 50,000 பிராங்கு நாணயங்களை வழங்கினுனும். ரஷ்ய நாட்டு லெனின் என்ற மேதையினபிப்பிராயப்படி, இசை, மன உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் சீர்மைப்படுத்துமாம். ஒரு நாட்டின் அரசியல் நிர்வாகம்செய்யக் கூடியவன் தலை சிறந்த இசை மேதையாக இருக்க வேண்டுமென்பது சீன நாட்டுக கன்பியூஷியசின் கருத்து "இந்துக்களின் இசைப் பண்கள்". (The Musical Modes of the Hindus) என்ற நூலில் ஸர் வில்லியம் ஜோன்ஸ் என்ற இந்திய நாடடுக் கலாசார மேதை (indologist) "உணவு உட்கொணட பிறகு இன்னிசை கேட்டால் ஜீரண உறுப்புகளுக்கு உற்சாகமேற்பட்டுத் தங்கள் வேலையை இனிது நிறைவேற்றுமாம். ஸர்தாமஸ்மோர் என்பவனும் உணவுக்கு பின் இன்னிசை கேட்பது நலம் எனறு எழுதியுள்ளான்.

சுமார் கி மு. 2500-ல் எகிப்திய நாட்டில் மனித உடலுக்கு ஏற்படக் கூடிய நோய்களைப் பற்றியும் அவற்றை இன்னிசையால், குணப்படுத்தும் முறையையும் விளக்கும் நூல் இருந்ததாகத் தெரிகிறது. ஹோமர் எழுதிய இலியட் என்ற நூலில் யுலிசிசு என்ற யவன அரசனின் ரத்தநாள வெடிப்பை இன்னிசை நேராக்கியதாகக் காணகிறோம். காபெல்லா என்ற இசை மேதை சுரத்தை (fever) இசையினால் குணப்படுத்தியுள்ளானும் லயர் என்ற குயிலுவக்கருவியை வாசித்து தெலேடிஸ் என்ற கிரேத்த இசைவல்லுநர் லாஸிடெய்மோனியர்களின் பசி தாகத்தை மறக்கச்செய்தானும் காது சம்பந்தப்பட்ட நோய்களை ஈஸ்குலாபியஸ் என்பவன் இன்னிசையால் நேராக்கியுள்ளானும். அலிசேனு என்ற அரேபிய இசை மேதை, இன்னிசையால் நோய்களைச் சீராககுவது பற்றி ஷபா (Shafa) என்ற மருத்துவ நூலை எழுதியுள்ளதாகச் சரித்திரங் கூறுகிறது. சித்தப்பிரமையை (mental disorder) இசையினால் காக்ஸ் என்ற வைத்தியர் குணப்படுத்தியுள்ளாராம். இன்னிசை பாடிப் பாண்டிய மன்னனது நோயை ஞானசம்பந்தப் பெருமான் சீர்படுத்தியதை நாமெல்லோரும் படித்திருக்கிறோமல்லவா! ஸ்பார்டா மெஸினியார்களுடன் போர் புரிந்த பொழுது டிர்டியசின் இன்னிசை கேட்டு வெற்றி பெற்றனராம். யவன சரித்திரத்தில முககியத்துவம் வாய்ந்த பைதகோரசின் மாணக்கர்களில் ஒருவனாகிய எம்பிடாகளிஸ் என்பவன தன்னுடைய இன்னிசையால் ஒருவனைத் தன தகப்பனைக் கொலை செய்யும தீயச் செயலிலிருந்து விடுவித்தானும்.

ஒரு சமயம சுல்தான அமுராத் என்பவனுக்கும் பாரசீகர்களுக்கு மேற்பட்ட கடும் போரில், அமுராத வெற்றிபெற்று பாகதாத் நகரத்தைக் கைப்பற்றிய பொழுது எதிர்த்துப் போரிட்ட 30000 பாரசீகர்களை வாளுககிரையாகக உத்திரவிட்டானும்; கைதிகளில் ஒருவன் சிறந்த சங்கீத வித்துவானும்; அவனுடைய நுண்ணிசை கேட்ட அமுராத் அவனையும் அவனது பாரசீகத் தோழர்களனைவரையும் விடுதலை செய்தானும். பிரஞ்சு நாட்டில், அமைச்சர் ஒருவரைப் பற்றி அவதூருகப் பேசிய இசை மேதைக்குச் சிறைத்தண்டனை கிடைத்ததாம்; சிறையில் அவன் பாடிய பொழுது சிலந்திப்பூச்சிகள் கீழே இறங்கி வந்து அவனது இசை கேட்டுக் களித்தனவாம். ஆரான் என்ற இசை வல்லுநரைக் கடலிலெறிந்து கொலை செய்து விடுவது என்று ஓர் கப்பற்றலைவன் தீர்மானித்தானும். இது எப்படியோ ஆரானுக்குத் தெரிந்துவிட்டது. கல்லும் கரைந்தோடும்படி இன்னிசை எழுப்பியவுடனே, கடல்வாழ் டோல்பின் என்ற மீன் இவ்விசையைச் செவிமடுத்து நீர் நிலைக்குமேல வந்து ஆரானைத் தனது முதுகிலேற்றி அக்கரை சேர்த்த சுவைபடும நிகழ்ச்சியை ஷேக்ஸ்பியரின் "பன்னிரண்டாமிரவு" (Twelfth Night) என்ற நாடகத்தில் காணகிறோம்.

அக்பர் சக்கரவர்த்தியின் அவைகளத்தலைமை இசை வித்துவானுகிய டான்சன் என்ற இஸ்லாமிய மதத்தைத் தழுவிய தானப்பாசாரியர் இரவில் பாடவேண்டிய பண்ணைப்பகலில் பாடியபொழுது, அவன் குரல் எவ்வளவு தூரம் கேட்குமோ அது வரை இருட்டி விட்டதாம். இவனது இசைத்திறமையை மெச்சி அக்பர் இவனுக்கு ஏராளமான மானியங்களை அளித்துள்ள விபரம் சரித்திரவாயிலாகக் கிடைத்துள்ளது. டான்சன வசித்துவந்த வீதியில் வேறு ஒருவரும் பாடக்கூடாது என்ற அரச கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது. இதை அறியாத பேசு பௌரா (Beju Bowra) என்ற இளைஞனும் அவனது தந்தையும் அவ் வீதிவழியாகப் பாடிக் கொண்டு சென்றனர். உடனே இவர்களை அரசாங்க உத்தரவுப்படி கைது செய்து சிறையிலடைத்தார்கள். பேசு பௌரா மிகவும் சிறிய பையன் என்ற காரணத்தால் விடுதலை செய்யப்பட்டான். ஆனல் இசைக் கலையில் பாண்டித்தியமடைந்து தந்தையை மீட்க வேண்டுமென்று பேரவாக கொண்டு, சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் தீவிர இசைப் பயிற்சி பெற்று மறுபடியும் டான்சன் வதிந்துவந்த வீதிவழியாகப் பாடிக்கொண்டு வந்தான். மீண்டும் கைது செய்யப்பட்டு சக்கரவர்த்திமுன் ஆஜர் செய்யப்பட்டான். உடனே தன்னுடைய இசைப்புலமையை வெளிப்படுத்தினன். அரண்மனையின் பின்பக்கத்திலுள்ள கலைமான்கள் ஓடிவந்து இவனது இசைக்கேட்டுக் களித்தபொழுது தன கழுத்திலுள்ள மாலையை ஒரு மானுக்கு அணிவித்தான். பிறகு இசையை நிறுத்திவிட்டான். மான்கள் திரும்பிச் சென்று விட்டன டான்சனை இசைபாடி அம்மான் கொம்பில் அணிவிக்கப்பட்ட மாலையை எடுத்து வரும்படி பணித்தான். மிகுந்த பிரயாசைப்பட்டு டான்சன் பாடியபோதிலும் பின்புரமிருந்த மான்கள் வரவில்லை; மறுபடியும் பௌராபாட ஆரம்பித்தும் மான்கள் வந்து களிப்படைந்தன. பௌரா தானே தனது மாலையை எடுத்துக் கொண்டானும். இதைக் கேட்டுப் பேரின்பமடைந்த அக்பர் பௌராவைத் தலைமை அவைக் களப் பொருநராக நியமித்தானும். ("அய்னி அக்பரி" என்ற அக்பர் சரித்திரத்திலுள்ள செய்தி) துளசிதாசர் இன்னிசையால் சம்சார வீடு பெற்றார். மீராபாய் இன்னிசையால் கண்ணனையடைந்தாள். (அய்னி அக்பரி). பட்சவாத நோய்வாய்ப்பட்டுப் பல்லாண்டுகளாகப்படுத்த படுக்கையாயிருந்த நாவாப் அலிகான் என்ற ராமப்பூர் அரசனை சுரச் கான் (Surej Khan) என்ற இசையோன் ஜெயஜெயவந்தி என்ற இராகத்தைப்பாடி குணமாக்கினனும். (காபிகான் Kafi Khan.)

நமது தமிழ் நாட்டிலும் இசையொலி மாண்புமிக வேலையைச் சாதித்திருக்கிறது. அமிர்தவாகினிராகம் இறந்தவனை உயிர்ப்பித்துள்ளது (தியாகையா). யது குலகாம்போதி வயிற்று நோயைத் தீர்த்திருக்கிறது (முத்துச்சாமி தீட்சிதர்). செடிகொடிகள் இன்னிசைக்கு

வளர்ந்துள்ளது என்பது அண்ணுமலைப் பலகழக ஆராய்ச்சியின் சாதனை. இன்னிசைக்குப் பசு அதிகப்பால் வழங்கியுள்ளது. நச்சரவுகள் இசைக்கு வயப்பட்டு கொடியவிடத்தையும் மறந்திருக்கின்றன,

மனித உடல் எலும்பு (bone), தசை muscle), நரம்பு (nerve) இவைகளால் ஆக்கப்பட்டிருக்கிறது. எலும்பு உடலை நிலை நிறுத்துகிறது தசைகள் இயங்குகின்றது; நரம்புகள் நடத்துகின்றன நரம்பு மண்டலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது — சலன மண்டலம் (motor, உணர்ச்சி மண்டலம் (sensory). உணர்ச்சி மண்டலம் உணர்ச்சியை மூளைக்கு கொண்டுசெல்கிறது. சலன மண்டலம் மூளையிலிருந்து மற்றய பாகங்களுக்கு நரம்பு மூலம் உணர்ச்சியை அனுப்புகிறது. ஆனல் சில சமயங்களில் மூளை மண்டலம் வீரியம் பெற்று முன்கூட்டிய திட்டமில்லாமலே திடீரியக்கம் செய்கிறது; அதனுல் சரீரத்தின் சில பாகங்களில் சில திட்டமான இயக்கங்கள் ஏற்படுகின்றன. உணர்ச்சி மண்டலம் இதனுல் ஒரு உணர்ச்சிகரப் புரட்சியை(stimulus) அடைகிறது. இதற்கு எதிர்த்தாக்கவியக்கம் (Reflex action) என்று பெயர். ஒரு பெரிய ஒலியைக் கேட்டால் திடுக்கிடுகிறதல்லவா! அதுதான் எதிர்த்தாக்கவியக்கம். நமது மூளை மண்டலம இம்மாதிரியான செயற்கை (artificial) எதிர்த்தாக்கவியக்கங்களை உண்டாக்குகிறது. நிலையான பயிற்சியால் ஒரு செயல் நமது உடலில் சகஜமான தன்மையை அடைகின்றது. இப்படித்தான் அனேக பழக்கங்கள் நமது உடலில் அடைகின்றன. வேற்றுமையுள்ள நெளிவுகளை (Curvature) யுடைய ஒலிகள் தான நிலையில் அமைந்தபொழுது இவற்றின் தொடர்பால் (association) வாழ்க்கைத்திறனின் பல்வேறு உணர்ச்சிகள் எதிர்த்தாக்க வியக்கத் தாலேற்படுகின்றன. எதிர்த்தாக்கவியக்கம் அவலம், வெகுளி உவகை, அமைதி முதலிய உணர்ச்சிகளை (நவரஸங்களை) ஏற்படுத்துகின்றன. இன்பத்திலும் துன்பத்திலும் இசை உதித்து மனத்திற்கு ஆறுதலளிக்கின்றது. இன்பந்துய்த்த உள்ளத்தினின்று மலர்ச்சியும் உயர்ச்சியும் கிளம்புகின்றன துன்பந்தோய்ந்த மனத்தில் அசைவும் கலக்கமும் ஏற்படுகின்றன. எனவே மலர்ச்சி, உயர்ச்சி, அசைவு, கலக்கம் முதலியவற்றிலிருந்து முறையே உவகை, பெருமிதம், இளிவரல், வெகுளி முதலியவை தோன்றுகின்றன. (இவை தொல்காப்பிய மெய்ப்பாட்டியலினுள்ளே விவரிக்கப்பட்டுள்ளது)

ஒரு செகண்டுக்கு ஏற்படும் பொருள்களின் துடிப்புகளின் எண்ணிக்கையை ஒலியின் சுருதி என்கிறேம இதற்கு ஒரு தாழ்ந்த எல்லையும் உயர்ந்த எல்லையும் உண்டு. ஒலி அதிக ஸ்தாயிகளுக்கு மேற்சென்ருல், காதால் கேட்பது கடினம்; அத்தகைய ஒலிகள்

அதிகமாயுள்ளதை விஞ்ஞானிகள் சமீபத்தில்தான் உணர்ந்தார்கள். ஆய்ந்து அவற்றின் தன்மையையும் கண்டறிந்தார்கள். நவீன ஆராய்ச்சியின் பயனாக மின்துடிப்புகளை ஒலித்துடிப்புகளாகவும் ஒலித்துடிப்புகளை மின்துடிப்புகளாகவும் மாற்ற இயலுகிறது. இத் துறையில் மின் உருத்தாழ் (Thermionic Valve) அதிக அடுக்கம் கொண்ட (frequency) மின் துடிப்புகளை உற்பத்தி செய்ய முடிகிறது. இதனால் தூரத்து ஒலிகளைப் பக்கத்து ஒலியாக மாற்றிவிட இயலும். இதேபோல மிகவும் குறைவான அடுக்கம் கொண்ட ஒலியைப் பேரொலியாகவும் மாற்றிவிடலாம். அண்மையிலுள்ள யானத்தில் (Medium) இப்பேர்ப்பட்ட ஒலி அலைகள் பரவுகின்றன, ஒரு துடிப்பகத்தின் அலைகள் மற்றொரு துடிப்பகத்தின் மீது விழும் பொழுது, ஒலித்துடிப்புகள் மின் துடிப்புகளாக மாற்றப்படுகின்றன. இந்த ஒலி ஒரேகதியுடன் (Velocity) ஒரு யானத்தில் பரவும் யானத்திற்கு யானம கதி வேறுபடும்; ஆனால் கேட்கக்கூடிய சுருதிகளின கதி ஒன்றாகவே இருக்கும்; இந்த ஒலிகள் ரசாயனச் சேர்க்கைகள் மூலம் செல்ல நேரிடும். அப்பொழுது மாறுதல்கள் துரிதமாக நடைபெறும். தாவரங்களை அழிக்கும் கிருமிகளை (Pests) இந்த அலைகளைக்கொண்டு அகற்றலாயினர். இவ்வலைகளின் எல்லாத்துறை புகு ஆய்வுகளால் அவற்றின பெருங்குணங்களை கண்டறிந்துள்ளனர். காற்றிலும் கடல் நீரிலும் இவ்வொலிகள் அனுப்பப்படும்பொழுது வெகுதூரம் ஒலி பரவுவதுடன் வேகமாயும் கதி அதிகமாயும் குணம் அதிகமாயும் பரவுகிறது. இந்த ஆராய்ச்சி மிகுந்து விபத்துக்களைத் தடுக்கத் தேவையானவற்றை விஞ்ஞானிகள் கண்டறிந்து வருகிறார்கள்.

பொருள்களின் துடிப்பு (vibration)ப் பரி கற்பனையில் (theory) நாத உற்பத்தியும் அதன தத்துவமும் அடங்கியுள்ளது என்று முன்னமேயே கண்டோம். ஆனால் இப்பரிகற்பனை போதிய அளவு உள்ளதாகவோ அல்லது திட்டவட்டமாக இருக்கிறதாகவோ (accurate) விஞ்ஞானிகள் கூற முடியவில்லை. தற்கால ஒலி ஆராய்ச்சியின் மூலமாக நாதம் பொருள்களின் துடிப்பையும்விட வேறுபட்டதாகக் கருதுவதற்கு இடமேற்பட்டிருக்கிறது. (Sound is independent of vibration) துடிப்பு ஒலிக்கு காரணமல்ல; ஆனால் அதன் விளைவு (result) ஒலியைக்கேட்டு அறிந்துகொள்ளும் சாதனம் நமது காது. சில குறிப்பான ஒலிகளைத்தான் காது கேட்கக்கூடும். மிகவும் குறைந்ததையே கேட்க முடியாது. எனவே உயர்ந்த-தாழ்ந்த எல்லைகளுக்கப்பாற்பட்ட ஆலோக பரிமாணங்களை (vistas) காதின் கேட்கும் தன்மை எட்டாது. இக்குறைவுபாட்டை நீக்கவே கேளாத ஒலிகற்பனையை (fiction of silent sound) விஞ்ஞானிகள் கண்டறிந்தனர் இந்தக் கற்பனையின் தத்துவம் யாதெனில்

துடிப்பினால் ஒலி ஏற்படுகின்றதென்றும் அது சாதாரண கேட்கும் தன்மைக்கப் பாற்பட்டது என்று விளக்கியுள்ளனர் இக்கற்பனை யின் முக்கியமான குணாதிசயங்கள் மேக்கரித்த ஒலி (ultra sonics). அதிகப்பட்ட ஒலி (super-sonics), மிகவும் தாழ்ந்த ஒலி (infra-sonics) ஒரு ஜாடிக்குள் காற்றிருக்கையில் மணி அடிக்கிறது; காற்றை அகற் றிச் சூன்யமாகச் (vacuum) செய்து விட்டால் மணி துடித்தாலும் ஒலி கேட்கப்படுவதில்லை. கேளாத ஒலி துடிப்புடனே ஜாடியில் நிகழ்கிறது. இந்தாவற்றிடம் வியோமம் அல்லது ஆகாசம் என்று கருதப்படுகிறது ஒலியின் பரவுதலுக்கு ஆகாசம் காரணம். (இதைப்பின்னர் ஒலிபரப்பு என்ற கட்டுரையில் விளக்குவாம்). ஒலி அழிவற்றது கேளாத தன மையைச் சில சமயங்களில அடைந்திருந்தபோதிலும் சப்தமற்ற ஒலி பேசுகிறது (silence speaks); தனிமை பாடுகிறது (solitude sings); மண்டலம் கூக்குரலை அனுப்புகிறது (the spheres send their sirens). ஆகாசம்தான் ஒலிக்குத் தாயகம். இதில் வியாபித்துள்ள தைததான் அனாகத நாதம் என்று கூறுகின்றனர்.

நாம் உச்சரிக்கும் வார்த்தைகளில் இருவித ஒலிகளிருக்கின்றன. ஒன்று ஒலிக்குக் காரணம், மற்றொன்று வார்த்தையால் குறிக்கப்படு கிற பொருள். பொருளை வார்த்தையால் சுட்டிககாட்டுவதற்கு முன் னால் அது மனதில் கேளாத ஒலியாக இருக்கிறது. சைதன்யம் என்பது (Comic Consciousness) வெளிப்படைச் சக்திக்கும்மளவு முகசக்திக் கும் (between potential and Kinetic energies) இயக்குகின்றது. ஒலிச்சக்தி மின்சக்தியோடு கலந்து மின்காந்த சக்தியாக (electro-magnetic) மாறிப் பூர்ண பலத்தையும் ஆகர்ஷிக்கும் சக்தியையும் அடைகிறது. இதுதான் நோய்களைக் குணமாக்க உதவுகிறது எனவே பாடும்பொழுது ஏற்படுகிற இன்னொலி, மின்னொலியாக மாறி யதும், புதிய சக்தியைப் பெற்று இயங்கத் தொடங்குகிறது. இதன் அனுதணமாக நரமபு மண்டலம் வசப்பட்டு தன்னிடமுள்ள கோளாறு களிலிருந்து விடுதலையடையவே பட்சவாதம் போன்ற (paralysis) நோய்கள் நொடிப்பொழுதில் குணமாகின்றன இதற்கு வேண்டிய சரித்திரச்சான்றுகள் மலிந்து கிடக்கின்றன. இமமாதிரி மின்சக்தி பெற்ற எலிகளைக் கொண்டு மூளைக்கோளாறு, ரததக்கொதிப்பு, ரத்த நாளங்களின் வெடிப்பு முதலிய நரமபுக்கோளாறுகளைத் தீர்க்கலாம். இது சம்பந்தமான நூல்களும் இருக்கின்றன. "ராக சிகித்சை" என்ற இசைநூல் இராகங்கள் எப்படி நோய்களைக் குணப்படுத்தும் என பதை விளக்குகின்றது.

மனித உடலிலுள்ள பல்வேறு இயக்கங்களை நவீன கருவி களின் துணை கொண்டு தற்காலத்தில் அளந்து கூறுகின்றனர் நரமபு மண்டலத்தின் பலவகைப்பட்ட இயக்கங்களை எய்ன் தோவன

கால்வனுமீடர் (Einthoven Galvanometer) என்ற கருவியால் கணித்துவிடுகின்றனர். தசைகளின் இறுக்கத்தை (tension) கைமோகி ராபிக்பேழையால் (Kymographic drum) அளக்கின்றனர். மின் இருதய அளப்பால் (electro-Cardiograms), கதோடுரே ஆஸில்லோ கிராப் (Cathoderay oscillograph) முதலிய கருவிகளின் துணை கொண்டு இருதயம், இவைகளின் துடிப்பைக் கணித்துக் கூறிவிடுகின் றனர். ஸோனுமீடர் என்பது இசையளக்கும் கருவி. இதன் உதவி யால் ஒலியின் ஏற்றத்தாழ்வு, பரிமாணம் முதலியவை நிர்ணயிக்கப்படு கிறது. ஒலியின் மிகுதியையும் (intensity) உரத்த தன்மையையும் (loudness) அளக்கக் கருவிகள் இருக்கும்பொழுது இன்னிசையின் (melody) தன்மையையும் பரிமாணத்தையும் ஏன் அளந்து விட முடி யாது? தற்கால விஞ்ஞான ஏற்றததினுதவியால் சாமானிய ஒலியை மின் சக்தி ஒலியாக மாற்ற முடிகிறபடியால், சக்திவாய்ந்த இவ்வொலி யால் நரம்புக்கோளாறுகளையும் மூளையின் உனமத்தத்தையும், பட்ச வாதம் போன்ற கடுமையான நோய்களையும் குணப்படுத்த முடியும். (இது சம்பந்தமாகச் சென்னை சங்கீத நாடக சங்கத்திஞதரவில் 1958-ல் "இசையின் ரோக சிகிச்சை" (Musical Therapeutics) என்ற தலைப் பில் நான் நிகழ்த்திய சொற்பொழிவு நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்) ஒலி அனுப்பானுக்கும் (transmitter) அதன் யேனத்திற்கும் (receiver) என்ன சம்பந்தம் இருக்கிறதோ அதே சம்பந்தந்தான் ஒலி எழுப்புபவ வருககும் கேட்போருக்குமிடையேயுள்ளது. நரம்பு, தசை முதலிய வற்றின் பலதரப்பட்ட இயக்கங்களை இசையொலி தன்னிச்சைப்படி இயக்குகிறது. எனவே இத் துறையில் போதிய ஆராய்ச்சி செய்து தற் கால விஞ்ஞானத்தை பயன் படுத்திக் கொண்டோமேயானுல் தீராத நோய்களும் நொடிப் பொழுதில் தீரும. விஞ்ஞான விஸ்தரிப்பைக் கவ னித்தால் பழங்கால சாதனைகளைவிட இப்பொழுது இன்னும் அதிக மாகச் சாதிக்கலாம்.

சரீரத்தைப் பித்தம், வாதம், சிலேடுமம் முதலிய குணங்களுக் கேற்றபடி வகுத்திருக்கிறுர்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தன்மையுண்டு. இவைகளையெல்லாம் நரம்பு-நாடிகளின் துடிப்பைக் கொண்டு அறுதியிடுகிறோம். பித்தக்குணம் மிகுதியானுல் சில பிரத்தி யேக நரம்பியககம அதை அறிவிககிறது. இசையொலிககு நரம்பு மண் டலமே கட்டுண்டுள்ளது. எனவே மிகுந்த குணமிகுதியால் பாதிககப் பட்ட நரம்பை அதற்காகவுள்ள இசையொலி கொண்டு நேராக்கலாம். இசைககீடுபடாத உயிர்வாழ் பிராணிகளேயில்லை என்பது எல்லோருக் கும் தொன்றுதொட்டுத் தெரிந்த உண்மை. ஆகையினுல் இத்துறை யில் தேவைப் பட்ட தீவிர ஆராய்ச்சி செய்தோமேயானுல் தீராத நோய்களை இன்னிசை மூலம் நேர் படுததத முடியும்; இதனுல் உலக

மாந்தரனைவர்கும் நாம் ஓர் மறவாத் தொண்டாற்றியதாகும் இத்துறையில் ஆய்ந்து தேவையான இசைக்கருவிகளைக் கண்டுபிடித்து விடலாம் ஆனால் அதில் செலவு ஏற்படும்; தனி நபர்கள் முதலீடு செய்வதும் சாத்தியமல்ல. அரசாங்கம், பல்கலைக்கழகம், இசைச்சங்கங்கள் முதலியவைகள் முதலீடு செய்ய முற்பட்டால் இதுவரை சாதிக்க முடியாத சிகிச்சைகளை எளிதில் செய்து விடலாம். 1958-ல் எனது சொற்பொழிவுக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் சாம்பமூர்த்தியவர்களும் அரசாங்கம் முன்வந்து இப்பேற்பட்ட ஒலி சிகிச்சை சாதனங்களை நிறுவி, மருத்துவ நிலையங்களில் அமைப்பார்களேயானால்' அதுவே நோயாளிகளுக்குப் பெரும் வரமாகும் என்று கூறியுள்ளார்கள்


Telegrams : " SANTOKH " Phone : 23888

# H. S. SINGH

**ENGINEER & CONTRACTOR**

145 PATEL ROAD

RAMNAGAR P. O. COIMBATORE-9.

*Specialist in :*

- REINFORCED CONCRETE BRIDGES
- CEMENT CONCRETE ROADS
- BITUMEN & TAR ROADS
- WATERPROOFING OF ROOFS
- BITUMEN BASKETBALL &
- TENNIS COURTS, INDUSTRIAL
- FLOORING.

# "தமிழிசை"

இசைத்தமிழ்த்திங்களோடு, தமிழகத்தின் தலைசிறந்த இசை மாதவெளியீடு இது ஒன்றே. ஏன் பாரத நாட்டிலே இசைத்திங்களேடு இது ஒன்றேதான. சிலப்பதிகார இசை, மிடற்றுப் பயிற்சி, நுண்பதங்கள், கலைச்சொற்கள் முதலியவற்றின் விளககம், இசைப் பெருமக்களின் வரலாறு, சாகித்தியவளர்ச்சி, ஒலிவிளக்கம், இசைக் கருவிகளின் வரலாறு. ஆண்டாளின் அனுபவிப்பு, சமய குரவர்களின் இசைக்கருவூலம், சிறந்த பாடல்களின் சுரசாகித்தியம் முதலிய சிறந்த கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இசைக்கருவூலம். இன்னும் இவைபோன்ற சுவையுள்ள இசைப்பகுதிகள். தொடர்ந்துவரும்.

---

ஆயுள் சந்தா ரூ. 100 ஆண்டுச்சந்தா ரூ. 9.

தனிப்பிரதி 75-காசு.

---

ஸங்கீதாசாரிய, கருநாடக ஸங்கீதமணி

**S. R. குப்புஸ்வாமி** B. A., M. Mus.,

ஆசிரியர்: "தமிழிசை"

---

"தமிழிசைக்" காரியாலயம்

35 விவேகானந்தா ரோடு, ராம்நகர் P. O. கோயமுத்தூர்-9.

பதிவு எண். M. 8422 தமிழிசை செப்டம்பர் 1968.



தியாகையாவின் இஷ்ட தெய்வம் இராமன். பல இராமாயண வரலாற்றிலுள்ளதை விட சுவையுள்ள கருத்துக்களும் இவரது படல்களில் மலிந்துள்ளன. கடலுக்கணை கட்டும் பொழுது இராமன் தொடுத்த பாணத்தின் மகிமையை ''எவரி இச்சிரிரா'' என்ற மத்தியமாவதிராகக்ருதியில் காணலாம். அடுத்த இதழில் சுரசாகித்தியமாய்வரும்.

Edited & Published by S. R. Kuppuswami at 35. Vivekananda Road Ramnagar Coimbatore-9. Printed by S. Sivakaruppaiah alias Gandhidasan at his Gandhidasan Achagam 14. Senguptha Road, Ramnagar, Coimbatore-9